வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 06.11.2024 புதன்கிழமை இதழ் : 310 பக்கங்கள் : 12




# கட்சிக்குள் இருப்பவர்கள் சிலர் தாமாக வெளியேறினால் நல்லது!

## சுமந்திரன் சொல்கிறார்



வடமராட்சி, நவம்பர் 06

மதுபானசாலை அனுமதிக்கு கடிதம் கொடுத்ததாலேயே சாள்ஸ் நிர்மலநாதன் தேர்தலில் இருந்து தானாக வெளியேறினார். விக்னேஸ்வரனும் போட்டியிடாது வெளியேறினார். இதேபோல், வேறுசிலரும் உள்ளே (கட்சிக்குள்) இருக்கிறார்கள். அவர்களும் தாமாக வெளியேறினால் நல்லது - இவ்வாறு கூறியுள்ளார் தமிழ் அரசுக் கட்சியின் எம். ஏ. சுமந்திரன். 11

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்:

## ஹேமசிறி, பூஜித் ஆகியோரை மீளவும் விசாரிக்குமாறு தீர்ப்பு

### உயர்நீதிமன்றம் அளித்தது

கொழும்பு, நவ. 06

முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ, முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர ஆகியோரை விடுவித்து கொழும்பு மேல் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை தனது உத்தரவு மூலம் வலுவற்றதாக்கியது உயர்நீதிமன்றம்.

புலனாய்வுத் தகவல்கள் கிடைத்தும் உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கத் தவறியதன் மூலம் 11

## டியாகோ கார்சியாவில் புகலிடம் கோரிய தமிழர்கள் பிரிட்டனுக்கு!

லண்டன், நவ. 06

டியாகோ கார்சியா தீவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஈழத் தமிழ் புகலிடக் கோரிக்கையாளர்களை பிரிட்டனுக்குள் அனுமதிக்கும் திட்டம் ஒன்றை பிரிட்டன் அரசாங்கம் முன்வைத்துள்ளது.

அமெரிக்கா - பிரிட்டன் நாடுகளின் இராணுவ தளமாக உள்ள டியாகோ கார்சியா தீவில் கடந்த 3 வருடங்களாக 60 இலங்கை தமிழ் புகலிடக் கோரிக்கையாளர்கள் தங்கியுள்ளனர். இவர்கள் அங்கு புகலிட கோரிக்கையை பதிவு செய்துள்ளனர். 11

## தமிழ் அரசுக் கட்சியின் ஆதரவை கோரவில்லை!

### தேசிய மக்கள் சக்தி சொல்கிறது

கொழும்பு, நவ. 06

"பொதுத் தேர்தலின் பின்னர் இணைந்து ஆட்சியமைப்பது தொடர்பில் தமிழ் அரசுக் கட்சியுடன் நாம் எவ்வித பேச்சும் நடத்தவில்லை. தனித்து ஆட்சி அமைப்பதற்கான பெரும்பான்மை பலம் எமக்கு கிடைக்கப் பெறும்." - என்று தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக்குழு உறுப்பினரும், ஜே. வி. பியின் பொதுச் செயலாளருமான ரில்வின் சில்வா தெரிவித்தார். 11

## அநுர குமாரவின் அரசாங்கம் 5 வருடங்கள் தொடரவேண்டும்!

### நாமல் ராஜபக்ஷ கூறுகிறார்

கொழும்பு, நவ. 06

"ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தலைமையிலான இந்த அரசாங்கம் இன்னும் ஐந்து வருடங்களுக்கு தொடர வேண்டும். அவ்வாறில்லையேல் நாடு சவால்களை சந்திக்க நேரிடும் " - என்று சிறீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

காலியில் நடந்த பரப்புரை கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். 11




## அரச நிர்வாகம் செயல்பட்ட விதம் மாற்றப்படும்!

கொழும்பு, நவ. 06

அரசாங்கத்தின் நோக்கத்துக்கும் அரச சேவைகள் செயல்படும் விதத்துக்கும் இடையில் இடைவெளி காணப்படுகிறது. நாட்டை அபிவிருத்தி செய்யும் அரசாங்கத்தின் 11







## யாழ். தலைமைகள் நரி தந்திரவாதிகள்

### பிள்ளையான் சாடல்

காரைதீவு, நவ. 06

தேசியப் பட்டியல் எம். பியை பெறவே யாழ்ப்பாண தலைமைகள் நரித்தந்திரமாக அம்பாறையில் போட்டியிடுகின்றனர் என்று கூறியுள்ளார் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பிள்ளையான் என்றறியப்பட்ட சி. சந்திரகாந்தன். 11

## நான் கொல்லப்படலாம்!

### அச்சம் வெளியிடுகிறார் சந்திரிகா

கொழும்பு, நவ. 06

தற்போதைய அரசாங்கத்தினால், தனக்கான பாதுகாப்பு குறைக்கப்பட்டுள்ள நிலையில், தன்னை கொலை செய்வதற்கான முயற்சிகள் இடம்பெறலாம் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, அச்சம் வெளியிட்டுள்ளார்.

பொது மக்கள் பாதுகாப்பு 11




உண்மைகள் புனிதமானவை கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இப்படியும் நடக்கிறது

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளராக போட்டியிட்ட அரியநேத்திரன், சங்கு சின்னத்தில் போட்டியிட்டதும், அதனையடுத்து அந்த சங்கு சின்னத்தை அவரை ஆதரித்த ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி தமதாக்கிக்கொண்டது பற்றியும் இந்தப் பத்தியில் நேற்று முன்தினமும் எழுதியிருந்தேன்.

சிலர் இந்த சின்னத்தைக் கண்டு ஏன் பயப்படுகின்றார்கள் என்ற எமது சந்தேகத்தையும் அந்தப் பத்தியில் எழுதியிருந்தேன். தமிழ் மக்கள் ஒரு சின்னத்துக்கு வாக்களித்து பழக்கப்பட்டுவிட்டால் அந்தச் சின்னத்துக்கே தொடர்ந்து வாக்களிப்பார்கள் என்ற பயம்தான் சிலருக்கு என்பதை அண்மையில் ஒரு பத்திரிகையில் வெளிவந்த அந்தப் பேட்டியை படித்தபோது ஏற்பட்டது.

தமிழ் அரசு கட்சியின் தலைவர் இப்போதும் என்னவோ மாவை சேனாதிராசாதான். ஆனால், அவர் ஒரு தலைவராக எதைச் செய்ய நினைத்தாலும் - செய்யமுடியாது என்பதும் நமக்கெல்லாம் தெரிந்தது தான். மற்றுமொருவர், அதன் தலைவராக புதிதாக தெரிவுசெய்யப்பட்டவர். அவர் இப்போது என்ன நிலையில் இருக்கிறார் என்பதும் பகிரங்கமானதுதான். இப்போது கட்சி என்னவோ சுமந்திரனின் முழுக்கட்டுப்பாட்டில்தான் இருக்கின்றது. இதுகூட அவர்களின் உட்கட்சி விவகாரம்தான்.

ஆனால், அந்தக் கட்சியின் வரலாறுகளைப் பற்றியும் கட்சியில் முன்னர் நடந்த சம்பவங்கள் பற்றியும் பொதுவெளியில் பேசுகின்றபோது அதுபற்றி தெரிந்துவிட்டுத்தான் பேச வேண்டும் என்பது கட்டாயமானது இல்லை. என்றாலும், வரலாறுகளையும் தகவல்களையும் பிழையாகக் கொண்டுசெல்வது ஏற்புடையது அல்ல.

தமிழ் அரசு கட்சியின் அறிவிக்கப்படாத தலைவராக இருக்கின்ற சுமந்திரன், அண்மையில் ஒரு பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகத் தாங்கள் போட்டியிட்டபோதும் தமிழ் மக்கள் தமிழ் அரசு கட்சியின் வீட்டுச் சின்னத்துக்கே வாக்களித்தார்கள் என்றும் இப்போதும் அவர்கள் அந்தச் சின்னத்துக்கே வாக்களிப்பார்கள் எனவும் சொல்லியிருக்கிறார்.

அதாவது, தமிழ் அரசு கட்சியில் போட்டியிடுகின்ற வேட்பாளர்கள்மீது தமிழ் மக்களுக்கு என்ன விரக்தி இருந்தாலும் அல்லது அவர்கள் எவ்வளவு 'பலவீனமான' வேட்பாளர்களாக இருந்தாலும் அல்லது அவர்களுக்கு என்ன கொள்கை இருந்தாலும் தமிழ் மக்கள் வீட்டுச் சின்னத்துக்குத்தான் வாக்களிப்பார்கள் என்று அவர் நம்புவது தெரிகின்றது.

அவர் அவ்வாறு நம்புவதற்கு காரணமும் இல்லாமல் இல்லை. கடந்த தேர்தலில் வன்னி தேர்தல் மாவட்டத்தில் ஒரு கட்சிக்கு கிடைத்த வாக்குகள் பதினொராயிரம் வாக்குகள் தான். இன்றைய தேர்தல் முறையில் அந்தக் கட்சிக்கு ஓர் ஆசனம் கிடைத்துவிட்டது. இப்போது அந்தக் கட்சியில் போட்டியிட்டவர்களின் விருப்பு வாக்குகளை எண்ணினால் அதில் ஆகக் கூடிய விருப்பு வாக்குகளைப் பெற்றவருக்குக் கிடைத்த வாக்குகள் மூவாயிரம்தான். ஆக, மூவாயிரம் வாக்குகளைப் பெற்ற ஒருவர் எம். பி. ஆக முடிந்தது.

அதனால்தான் தனக்கு வாக்களிக்காவிட்டாலும் வீட்டுக்கு வாக்களியுங்கள் என்றும் வீட்டுக்கு ஆசனம் கிடைத்தால்போதும் எனவும் சிலர் நினைக்கிறார்கள். அப்படி வாக்குகள் கிடைக்கும்போது, கிடைப்பதில் தனக்கு அதிகூடிய விருப்பு கிடைக்கும் என்று நம்புகிறார்கள்போலும்...

அதுவல்ல, நாம் இன்று சொல்ல வருவது:

ஒரு கட்சியின் தலைவராக வர வேண்டும் என்று நினைக்கின்ற ஒருவர் அல்லது தானே தலைவர் என்று நினைத்துக் கொண்டிருக்கின்ற ஒருவர், முதலில் கட்சியின் வரலாற்றை படித்திருக்கவேண்டும் அல்லது தனக்குத் தெரியாதவற்றை பொதுவெளியில் சொல்லி வரலாற்றை மாற்றியமைக்க முற்படக்கூடாது.

மேலே சான்ன பேட்டியில் சுமந்திரன் கூறியிருக்கும் ஒரு தகவல் எத்தனை அபத்தமானது என்பதை சொல்லாமல் இருக்க முடியவில்லை.

"தந்தை செல்வா காலத்தில் அவரின் மூளை என்று வர்ணிக்கப்பட்ட வி. எஸ். நாகநாதன் வெளியேறி ஊர்காவற்றுறை தொகுதியில் சுயாட்சிக் கழகம் என்ற பெயரில் போட்டியிட்டார். ஆனால், இம்முறை அவ்வாறு கட்சியின் மூளை என்று கூறக்கூடிய அளவுக்கு வெளியேறியவர்கள் யாருமில்லை", இதுதான் சுமந்திரன் பேட்டியில் 'ஹைலைற்'.

தந்தை செல்வா தமிழ் காங்கிரஸிலிருந்து வெளியேறி தமிழ் அரசு கட்சியைத் தொடங்கியபோது அவருடன் கூடவே காங்கிரஸிலிருந்து வெளியேறியவர்களில் முக்கியமானவர் டாக்டர் இ. மு. வி. நாகநாதன். ஈ. எம். வி. நாகநாதன் என்று அறியப்பட்ட அவரின் முழுப்பெயர் இலங்கை முருகேசு விஜயரத்தினம் நாகநாதன்.

1956 ஜூன் 5 அன்று, சிங்களம் மட்டும் சட்டத்துக்கெதிராகக் கொழும்பு - காலிமுகத் திடலில் பாராளுமன்றத்துக்கு முன்னால் நாகநாதன் உட்பட பல தமிழ்த் தலைவர்கள் சத்தியாகிரகம் மேற்கொண்டனர். இவர்கள் சிங்களக் கும்பல் ஒன்றால் பொலிஸார் முன்னிலையில் தாக்கப்பட்டனர். இதன்போது நாகநாதன், வ. ந. நவரத்தினம் ஆகியோர் குண்டர்களால் அருகிலுள்ள ஏரியில் தூக்கி எறியப்பட்டனர். அதன் பின்னர் அவர் இரும்பு மனிதன் நாகநாதன் என்று தமிழர்களால் அழைக்கப்படலானார்.

அந்த நாகநாதன், பின்னர் தந்தை செல்வாவின் சம்பந்தியும் ஆனது பழைய கதை. அவரின் மகளையே தந்தை செல்வாவின் மகன் சந்திரஹாசன் திருமணம் செய்துகொண்டார். சில வருடங்களுக்கு முன்னர், சுமந்திரன் இரண்டு சட்ட அறிஞர்களுடன் அமெரிக்கா சென்றபோது அவருடன் சென்றவர்களில் ஒருவர் இந்த நாகநாதனின் மகள் என்பதும் குறிப்பிடப்படவேண்டியது.

'தமிழ் அரசின் மூளை' என்று வர்ணிக்கப்பட்டவர் காவலூர் வி. நவரத்தினம். அவரே 1968இல் தமிழ் அரசு கட்சி டட்லி சேனநாயக்காவின் அரசாங்கத்தில் இணைய முடிவெடுத்தபோது அதனை எதிர்த்து தமிழ் அரசு கட்சியிலிருந்து வெளியேறி, தமிழர் சுயாட்சிக் கழகத்தை ஆரம்பித்திருந்தார்.

இதனால்தான் தனக்கு தெரியாத விடயங்களை பேசுவதை தலைவர்களாக விரும்புபவர்கள் தவிர்த்துக் கொள்வது நல்லது.

இப்போது கட்சியிலிருந்து வெளியேறியவர்களின் மூளை பற்றியும் சுமந்திரன் பேசியிருக்கிறார். அது பற்றியும் இந்தப் பத்தியில் எழுதுவதானால், அது நீண்டுவிடும். இதுபற்றி முடிந்தால் நாளை பேசுவோம்.

**- ஊர்க்குருவி.**

# கிளிநொச்சி உதவி தெரிவத்தாட்சி அலுவலர்களுடன் கலந்துரையாடல்

கிளிநொச்சி, நவ. 06

கிளிநொச்சியில் தேர்தல் கடமைகளில் ஈடுபடவுள்ள உதவி தெரிவத்தாட்சி அலுவலர்களுடனான கலந்துரையாடல் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

எதிர்வரும் 14ஆம் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலுக்கான முன்னாயத்த பணிகள் கிளிநொச்சி மாவட்டத்தில் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இதன் ஓர் அங்கமாக கிளிநொச்சி மாவட்டத்தில் வாக்களிப்பு நிலையங்களில் கடமையில் ஈடுபடவுள்ள உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கான முன்னாயத்த கலந்துரையாடல் நேற்று நடைபெற்றது.



கிளிநொச்சி தெரிவத்தாட்சி அலுவலர் எஸ். முரளிதரன் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடந்த இந்தக் கலந்துரையாடலில் உதவி தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கான கடமைகள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட பதில் உதவித் தேர்தல் ஆணையாளர் டி. சி. அரவிந்தராஜ் விளக்கமளித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் உதவி தெரிவத்தாட்சி அலுவலகர்களாக நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் கிளிநொச்சி மாவட்ட தேர்தல் திணைக்கள உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (ஐ)


# 'சீத்துவக்கேடு' தொகுப்பு நூல் அறிமுக விழா!

யாழ்ப்பாணம், நவ. 06

காரைக்கவி கந்தையா பத்மானந்தன் எழுதிய 'சீத்துவக்கேடு' என்ற தொலைந்துவிட்ட வாழ்வியல் நினைவுகள் பற்றிய கட்டுரைகளின் தொகுப்பு நூல் அறிமுக விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு நல்லை ஆதீன மண்டபத்தில் காரை சுந்தரம்பிள்ளை பெயரால் அமைந்த அரங்கில் நடைபெறவுள்ளது.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண ஆளுநர் நா. வேதநாயகன், கௌரவ விருந்தினராக வட மாகாண பிரதம செயலாளர் இ. இளங்கோவன், சிறப்பு விருந்தினர்களாக ஜீவநதி சஞ்சிகை ஆசிரியர் க. பரணீதரன், எங்கட புத்தகங்கள் குழும நிறுவுநர் கு. வசீகரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஐ)

# கந்தசஷ்டி விரத அடியார்க்கு பழப் பொதிகள் அன்பளிப்பு



வடமராட்சி, நவ. 06

கந்தசஷ்டி விரதத்தை முன்னிட்டு அடியவர்களுக்குப் பழ வகைகளை சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகம் தொடர்ச்சியாக வழங்கி வருகிறது.

சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ. மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் பழவகைகள் அடியார்களுக்கு வழங்கப்படுகின்றன.

ஒவ்வொரு அடியவருக்கும் அப்பிள், திராட்சை பழம், பேரிச்சம்பழம், தோடம் பழம், கதலி, கப்பல், இதரை, செவ்வாழை, மருத்துவ வாழைப் பழங்களும் மற்றும் சர்க்கரையும் அடங்கிய சுமார் ஆயிரத்து 500 ரூபாய் பெறுமதியான பழப் பொதிகள் வழங்கப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சடலத்தை பொறுப்பேற்க கோரிக்கை!

யாழ்ப்பாணம், நவ. 06

யாழ். போதனா மருத்துவமனையில் உயிரிழந்தவரின் சடலத்தை பொறுப்பேற்குமாறு மருத்துவமனையின் பிரதி பணிப்பாளர் அறிவித்துள்ளார்.


கடந்த ஒக்ரோபர் 27ஆம் திகதி சுகயீனம் காரணமாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட தர்மலிங்கம் வசந்தராஜன் (வயது 60) என்பவர் மருத்துவமனையில் உயிரிழந்தார்.

இவரின் சடலத்தையே பொறுப்பேற்குமாறு மருத்துவமனை நிர்வாகம் அறிவித்துள்ளது. (ஐ)

# மரண அறிவித்தல்

## திரு. யேசுரட்ணம் நேசம் விக்ரோறியா (வேம்பன்)

(ரவிதா ஸ்ரோர்ஸ் உரிமையாளர் - யாழ்ப்பாணம்)



**பிறப்பு 28.09.1947** **இறப்பு 04.11.2024**

தென்னிந்தியா வேம்பாரைச் சேர்ந்த நேசம் விக்ரோறியா நேற்று முன்தினம் (04.11.2024) திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற யேசுரட்ணம் விக்ரோறியா - றோசம்மாள் குரூஸ் தம்பதியரின் புதல்வரும் காலஞ்சென்ற யேவதி விக்ரோறியாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற றொசாறி விக்ரோறியா, மனோகரி, லிசியராணி, மனோகரன், விக்ரோறியா, அன்ரன், நவம் ஆகியோரின் அன்பு சகோதரரும் ரஞ்சித், ரவிதா, யூட்டினா, வேஜினியா, கமில்ரன், அஜேந்தினி, றொசானி, ஒக்ஷியா, அனோசன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்துக்காக இன்று (06.11.2024) புதன்கிழமை 3 மணியளவில் 178, பிக்கறிங்ஸ் றோட், கொழும்பு 13 அவரின் இல்லத்திலிருந்து மாதம்பிட்டி சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :

**மனோகரன் விக்ரோறியா(தம்பி) 0722277967 - ABC METAL**

**கமல் - 0773270828 - ரவிதா ஸ்ரோர்ஸ்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu 06.11.2024 புதன்கிழமை
பிலவ வருடம், ஐப்பசி 20

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## கூலி வேட்பாளர்கள் பட்டாளம்

உண்மையாகவே மக்கள் சேவைக்கு தங்களை அர்ப்பணித்த பலர் அரசியலில் ஈடுபட்டு தங்களிடம் இருந்த சொத்துகளையும் இழந்து வாழ்வின் இறுதிக்காலத்தில் பெரும் கஷ்டங்களை அனுபவித்தமை பற்றி அந்தக் காலத்தில் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால், இந்தக் காலத்தில் அரசியலில் ஈடுபடுகின்றவர்கள் தங்கள் வாழ்க்கையில் கஷ்டங்களை அனுபவிக்கிறார்கள் என்று கூறமுடியுமா?

இன்று அரசியல் சுலபமாக பெரும் பணம் பண்ணுவதற்கான ஒரு மார்க்கமாகிவிட்டது. அரசியல் இன்று பழிபாவத்துக்கு அஞ்சாமல் காரியங்களைச் செய்யக்கூடிய பேர்வழிகளால் நிரம்பி வழிகிறது.

கடன்பட்டு காசு சேர்த்து ஒரு பத்துப் பேரை கூட்டி ஒரு கட்சியை தேர்தல்கள் ஆணைக்குழுவில் பதிவு செய்து வைத்திருந்தாலும்கூட அது ஒரு முதலீடாக மாறியிருக்கும் விசித்திரத்தை காண்கிறோம். அரசியல் இன்று வியாபாரமாகிவிட்ட நிலையில் தேர்தல் காலங்களில் கட்சிக்கு அந்தரிப்பவர்களுக்கு அதை விற்பனை செய்து கோடிக்கணக்கில் பணத்தை சம்பாதித்துக் கொள்வதற்கான வாய்ப்பும் இப்போது இருக்கிறது.

அண்மைக்காலத்தில் அவ்வாறு சில கட்சிகள் விற்பனை செய்யப்பட்டிருக்கின்றன. அரசியல்வாதிகள்தான் விலைபோவதாகக் கேள்விப்பட்டோம். இப்போது கட்சியே சின்னத்துடனும் கொடியுடனும் விலைபோகிறது. அது மாத்திரமல்ல, வேட்பாளராவதுகூட இப்போது நல்ல சம்பாத்தியத்துக்கான ஒரு சுலபமான 'தொழிலாகி' விட்டது.

இலங்கை பாராளுமன்ற தேர்தல் வரலாற்றில் முன்னென்றும் இல்லாதளவுக்கு இந்தத் தடவை பெருவாரியாக அரசியல் கட்சிகள், குழுக்கள் மாத்திரமல்ல, சுயேச்சைக் குழுக்களும் தேர்தலில் களமிறங்கியிருக்கின்றன. நாற்பதுக்கும் அதிகமான சுயேச்சை குழுக்கள் போட்டியிடுகின்ற தேர்தல் மாவட்டங்களும்கூட இருக்கின்றன.

நீண்டகாலமாக செயல்படுகின்ற முக்கியமான கட்சிகள் என்று அடையாளப்படுத்தக் கூடியவற்றைத் தவிர, மற்றைய பெருவாரியான கட்சிகளிலும் சுயேச்சைக் குழுக்களிலும் வேட்பாளர்களாகக் களத்தில் நிற்கும் பெரும்பாலானவர்களை மக்களுக்கு யாரென்றே தெரியாது. அவர்களும் நாட்டையும் மக்களையும் பாதுகாப்பதற்கு தங்களுக்கு வாக்களிக்குமாறு கேட்கிறார்கள். நவீன தகவல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சியும் சமூக ஊடகங்களும் ஒரு கைபேசியே தேர்தல் பிரசாரத்துக்கு போதுமானது என்று இந்த பேர்வழிகளை நம்பவைத்துவிட்டன.

தங்களின் கட்சியில் அல்லது சுயேச்சைக் குழுவின் வேட்பாளர்கள் பட்டியலில் இணைந்து கொள்கிறீர்களா என்று அரசியலில் எந்தவிதமான ஆர்வமும் இல்லாதவர்களிடமே அரசியல்வாதிகள் வலிந்து கேட்டு பணத்தை நீட்டுகிறார்கள். அவர்களுக்கு நேர்மையான உழைப்பு என்றால் என்னவென்றே தெரியாத - மோசடித்தனமாக சொத்துகளை குவித்த பேர்வழிகள் சிலர் பணத்தை அள்ளி வீசுகிறார்கள். அவர்கள் ஒரு கட்சிக்கோ அல்லது சுயேச்சைக் குழுவுக்கோ பணத்தைக் கொடுக்கவில்லை. பல கட்சிகளுக்கும் குழுக்களுக்கும் தூவுகிறார்கள்.

பெரும் பணம் கையில் இருப்பதால் அரசியலை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும் என்ற கனவு அவர்களுக்கு. அரசியல்வாதிகள் பலரும் அவர்களைத் தேடிச்சென்று பணத்தை வாங்கி தேர்தல் பிரசாரங்களுக்கு செலவு செய்வது மாத்திரமல்ல தங்கள் சட்டைப் பைகளிலும் போட்டுக் கொள்கிறார்கள் என்பது இன்று எல்லோருக்கும் தெரிந்த இரகசியம்.


பாராளுமன்றத் தேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள் தாக்கலுக்கு முன்னதாக புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தில் இருக்கும் சில பிரகிருதிகள் "பணம் தருகிறோம். சுயேச்சை குழுவொன்றைக் களமிறக்க முடியுமா?" என்று தங்களிடம் கேட்டதாக வடக்கு, கிழக்கைச் சேர்ந்த சில பிரமுகர்கள் வெளிப்படையாகவே கூறுகிறார்கள். இன்று தமிழ்ப் பகுதிகளில் சுயேச்சைக் குழுக்கள் மழைக்கு முளைத்த காளான்கள் போன்று பல்கிப் பெருகியதற்கு இந்த 'வெளிப்பணம் ' முக்கிய காரணம். இந்தப் பணம் பல 'கூலி வேட்பாளர்கள்' பட்டாளம் ஒன்றை உருவாக்கியிருக்கிறது. இனிமேல் தேர்தல் காலங்களில் "வேட்பாளர் தேவையா? தொடர்பு கொள்ளுங்கள்" என்று விளம்பரம் வந்தாலும் ஆச்சரியமில்லை.

வடக்கில் சில சுயேச்சை குழுக்களின் வேட்பாளர்கள் சமூக ஊடகங்களில் செய்யும் கோமாளித்தனமான பதிவுகள் மக்களின் விவேகத்தை நிந்தனை செய்கின்றன. ஆனால், அவர்களில் சிலர் பாராளுமன்றத்துக்கு தெரிவாகக்கூடிய வாய்ப்பு இருப்பதாகவும்கூட சிலர் பேசிக்கொள்வது தமிழ்ச் சமூகத்துக்கு பெரும் அவமானமாகும். தமிழ் மக்கள் சிந்தித்துச் செயல்பட வேண்டிய தருணம் இது.

### வடமாகாண மரநடுகை மாதம்
### கார்த்திகை - 2024

"உலகம் நாளை துண்டுகளாக உடைந்து அழியப்போவதாக நான் அறிந்தாலும் இன்றும் ஒரு மரத்தை நடுவேன்."
- மார்ட்டின் லூதர் (ஜேர்மனிய கத்தோலிக்க மதகுரு)







காங்கேசன்துறை ஐயனார் ஆலயத்தின் மண்டலாபிஷேக நிறைவில் திருக்கல்யாண திருவிழா நடைபெற்றவேளை...!
(படங்கள் - ஐ. சிவசாந்தன்)

## இரட்டை கொலை குற்ற சந்தேகநபரை பிணையின்றி தடுத்து வைக்க உத்தரவு

வவுனியா, நவ. 06

இரட்டைக்கொலை சந்தேகநபரை பிணையின்றி மூன்று மாதங்கள் தடுத்து வைக்க வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் உத்தரவிட்டுள்ளார்.

வவுனியா தோணிக்கல்லில் பிறந்தநாள் கொண்டாட்டத்தின்போது நடத்தப்பட்ட தாக்குதலில் இளம் தம்பதியர் கொல்லப்பட்டனர். இந்தக் கொலைகள் தொடர்பில் 6 பேர் மீது குற்றஞ்சாட்டப்பட்டது. கைது செய்யப்பட்ட இவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்ட நிலையில் வவுனியா மேல் நீதிமன்றில் வழக்கு நிலுவையில் இருந்தது.

இந்த நிலையில், பிரதிவாதிகளில் ஒருவர் கனடா செல்வதற்காக ஆவணங்களை இரகசியமாக தயாரித்து வருகிறார் என்று கிடைத்த தகவலையடுத்து, வவுனியா மேல் நீதிமன்ற சட்டத்தரணிகள் குழு ஒன்று விசாரணைகளை மேற்கொண்டதுடன், அது தொடர்பான ஆதாரங்களை மேல் நீதிமன்றத்தின் கவனத்துக்கு கொண்டு வந்தனர்.

இந்தத் தகவலை கருத்தில் கொண்ட மேல் நீதிமன்ற நீதிபதி சந்தேகநபரை கைது செய்து மன்றில் முற்படுத்த உத்தரவிட்டார். இதன்படி, கைது செய்யப்பட்டு மன்றில் முற்படுத்தப்பட்ட சந்தேகநபரை மூன்று மாதங்கள் பிணையின்றி தடுத்து வைக்க உத்தரவிட்டார்.

(ஐ)

## இளைஞனிடம் மோசடி சந்தேகநபருக்கு மறியல்

யாழ்ப்பாணம், நவ. 06

வெளிநாடொன்றுக்கு அனுப்பி வைப்பதாகக் கூறி யாழ்ப்பாணத்தை சேர்ந்த இளைஞன் ஒருவரிடம் 14 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயை மோசடி செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவர் நீதிமன்ற உத்தரவில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தை சேர்ந்த இளைஞன் ஒருவரை வெளிநாட்டுக்கு அனுப்பி வைப்பதாகக் கூறி 14 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயை பெறறவர் அடுத்து எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

இது தொடர்பில், இளைஞன் யாழ் . மாவட்ட குற்றத் தடுப்பு பொலிஸ் பிரிவில் முறைப்பாடு செய்தார்.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் சாவகச்சேரி பகுதியில் வைத்து சந்தேகநபரை கடந்த ஞாயிற்றுக்கிழமை கைது செய்தனர்.

கைதான சந்தேகநபர் யாழ். நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். இதன்போதே அவரை விளக்க மறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

(ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கடந்த இரண்டு நாட்களாக கணவன் - மனைவிக்குள் இருந்த மனப்போர் நீங்கும். நீண்ட நாட்களாக தள்ளிப் போன காரியங்கள் முடியும். எதிர்பார்த்த நல்ல செய்தி வரும்.

சந்திராஷ்டமம் இருப்பதால் தேவையற்ற அலைச்சல்கள் அதிகரிக்கும். அவசரப்பட்டு அடுத்தவர்களை விமர்சிக்க வேண்டாம். சக ஊழியர்களை பகைத்துக் கொள்ள வேண்டாம்.

தன்னம்பிக்கையுடன் எதையும் செய்யத் தொடங்குவீர்கள். சகோதரர் வகையில் உதவிகள் உண்டு. கல்யாணப் பேச்சு வார்த்தை வெற்றியடையும். திறமைகள் வெளிப்படும் நாள்.

குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகளின் ராஜதந்திரத்தை உடைப்பீர்கள்.

குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். நீண்ட நாள் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். புது ஏஜென்சி எடுப்பீர்கள். உத்தியோகத்தில் சூட்சுமங்களை உணர்வீர்கள்.

பால்ய நண்பர்கள் உதவுவார்கள். திடீர் வெளியூர் பயணங்களால் அலைச்சல் இருந்தாலும் ஆதாயமும் உண்டு. புது வேலை அமையும். வெளிவட்டாரத் தொடர்புகள் அதிகரிக்கும். உயரும் நாள்.

உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். உடன்பிறந்தவர்கள் உறுதுணையாக இருப்பார்கள். விருந்தினர்களின் வருகையால் வீடுகளைக் கட்டும். தைரியமான முடிவுகள் எடுக்கும் நாள்.

கடந்த இரண்டு நாட்களாக இருந்த சோர்வு நீங்கி துடிப்புடன் செயல்படத் தொடங்குவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். அழகும் இளமையும் கூடும். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும்.

ராசிக்குள் சந்திரன் இருப்பதால் பல வேலைகளையும் இழுத்துப்போட்டு பார்க்க வேண்டி வரும். சாதாரணமாக பேசுவதை கூட சிலர் தவறாகப் புரிந்து கொள்வார்கள்.

எதிர்பார்த்த வேலை தாமதமாக முடியும். யாருக்கும் பணம் நகை வாங்கித் தருவதில் ஈடுபட வேண்டாம். பிள்ளைகளின் உணர்வுகளைப் புரிந்துக் கொள்ளுங்கள்.

சமயோஜித புத்தியால் எல்லாப் பிரச்னைகளையும் சமாளித்து வெற்றி பெறுவீர்கள். நட்பு வழியில் நல்ல செய்தி கேட்பீர்கள். வியாபாரத்தில் எதிர்பார்த்த ஒப்பந்தம் கையெழுத்தாகும்.

கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். பிள்ளைகளை புதிய பாதையில் வழி நடத்துவீர்கள். பிரபலங்கள் உதவுவார்கள். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள்.

# "வடக்கு மீனவர்களின் வாழ்வாதாரத்தில் ஜனாதிபதி அக்கறை கொள்ள வேண்டும்"

யாழ்ப்பாணம், நவ. 06

வடக்கு மாகாண கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்தில் மிகவும் அக்கறைகொண்டு ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க செயல்பட வேண்டும் என்று யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசங்களின் சம்மேளனத் தலைவர் சிறீகந்தவேள் புனித பிரகாஷ் தெரிவித்தார்.

அத்துமீறும் இந்திய மீனவர்களின் செயல்பாடுகளால் எமது கடல் வளங்கள் அழிக்கப்படுகின்றன என்றும் அவர் கூறினார்.

யாழ்ப்பாணத்திலுள்ள அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் வடக்கு கடற்பரப்பில் தற்போது மிகவும் அதிகரித்துக் காணப்படுகின்றது.

இதனால் எமது மீனவர்கள் பல்வேறு பிரச்னைகளை தொடர்ச்சியாக எதிநோக்கி வருகின்றனர்.

குறிப்பாக கடல் வளம் சுரண்டப்படுவதுடன் மீனவர்களின் தொழில் உபகரணங்களும் சேதமாக்கப்படுவதால் மீனவ மக்களின் வாழ்வாதாரம் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளது.

இவ்வாறு தொடர்ந்தும் அத்துமீறும் இந்திய மீனவர்களின் செயல்பாடுகளால் எமது வளங்கள் அழிக்கப்பட்டு வாழ்வாதாரத்துக்கே பெரும் சவால் ஏற்படுகிறது.

இந்த விவகாரம் தொடர்பில் பல தரப்பினர்களிடமும் நாங்கள் முறையிட்டுள்ளோம். அதே வேளையில் தொடர்ச்சியாக பல்வேறு போராட்டங்களையும் முன்னெடுத்திருக் கிறோம்.



இவ்வாறான நிலையில் புதிதாக ஆட்சிக்கு வந்துள்ள ஜனாதிபதி அநுரகுமார, மீனவர் விவகாரத்தில் உரிய நடவடிக்கையை விரைந்து எடுக்க வேண்டுமென கோருகிறோம்.

இதற்கமைய வடக்கு மாகாண மீனவர்களின் வாழ் வாதாரத்தில் மிகவும் அக்கறை கொண்டு ஜனாதிபதி செயல்பட வேண்டும். குறிப்பாக மக்களுக்கு வழங்கிய நம்பிக்கையையும் வாக்குறுதிகளையும் நிறை வேற்ற வேண்டும்"- என்றார். (எ)

# மாமியார் மீது துப்பாக்கிச்சூடு மருமகன் தலைமறைவானார்

வவுனியா, நவ. 06

வவுனியா சுந்தரபுரம் பகுதியில் இளைஞன் ஒருவர் மேற்கொண்ட நாட்டுத் துப்பாக்கிப் பிரயோகத்தில் பெண் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இது தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

குறித்த பெண்ணின் வீட்டுக்குச் சென்ற அவரது மருமகன் நாட்டுத் துப்பாக்கியால் பெண்ணின் வாய்ப்பகுதியில் சுட்டுள்ளார். இதனால் படுகாயமடைந்த பெண் உடனடியாக மீட்கப்பட்டு வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

சுந்தரபுரம் பகுதியைச் சேர்ந்த 54 வயது பெண்ணே படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

தாக்குதலை மேற்கொண்ட நபர் தலைமறைவாகியுள்ள நிலையில் அவரை கைது செய்வதற்கான நடவடிக்கைகளில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். (எ)

# மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

கிளிநொச்சி, நவ. 06

பூநகரி சமூக அபிவிருத்தி சங்கம் - கனடா அமைப்பினரால் முழங்காவில் மகா வித்தியாலயத்தில் இவ்வருடம் நடைபெற்ற க. பொ. த. சாதாரண தரப்பரீட்சையில் 9 ஏ சித்தி பெற்ற இரு மாணவர்களுக்கான பணப் பரிசு மற்றும் கற்றல் உபகரணங்கள் நேற்று வழங்கப்பட் டன. அந்த அமைப்பின் முகாமைத்துவ இயக்குநர் எஸ். அரவிந்தன், அதிபர் ப. ஆனந்த ராசா, உதவி அதிபர் எம். சாந்தன் சத்திய கீர்த்தி மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (எ)



# இலங்கையை சுற்றி வந்த 11 வயது மாணவனுக்கு மக்கள் வரவேற்பு

கிளிநொச்சி, நவ. 06

39 நாட்களாக இலங்கையை நடைபயணம் மூலம் சுற்றி வந்த கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் தரம் 06 இல் கல்வி கற்கும் 11 வயது மாணவன் மு. டினோஜன் தனது பயணத்தை நிறைவு செய்தார்.

கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் முரளீதரன் டினோஜன் என்ற மாணவன் சாதனை படைக்கும் நோக்குடன் கடந்த செப்ரெம்பர் மாதம் 25 ஆம் திகதி தனது தந்தையுடன் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்திலிருந்து நடைபயணத்தை ஆரம்பித்தார். இவர் இலங்கை பூராகவும் 39 நாட்களில் சுற்றி வந்து ஆரம்பித்த இடமான கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்தில் நிறைவு செய்தார். குறித்த சிறுவனையும் தந்தையையும் விளையாட்டுக் கழகத்தினர், மக்கள் இணைந்து வரவேற்றனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுத் தேர்தல் விதிமீறல் 1,642 முறைப்பாடுகள் பதிவு

கொழும்பு, நவ. 06

**பொதுத் தேர்தல் விதிமீறல்கள் தொடர்பில் நேற்று முன் தினம் மாலை 4.30 வரையான காலப்பகுதி வரை ஆயிரத்து 642 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.**

தேர்தல்கள் ஆணைக்குழுவினால் நேற்று காலை வெளியிடப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பான அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கிணங்க தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 386 முறைப்பாடுகளும் மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 1256 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன.

நேற்று முன் தினம் மாலை 4.30 வரையான 24 மணித்தியாலத்தில் 107 முறைப்பாடுகள் பதிவாகியுள்ள நிலையில், தேர்தல் குறித்த வன்முறை சம்பவம் எதுவும் பதிவாகவில்லை எனவும் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதுவரையான முறைப்பாடுகளில் 1365 முறைப்பாடுகளுக்கான தீர்வுகள் கண்டறியப்பட்ட நிலையில், 277 முறைப்பாடுகள் குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் நேற்று காலை வெளியிடப்பட்ட முறைப் பாடுகள் தொடர்பான அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# அரசசார்பற்ற தேசிய செயலகம் மத்திய வங்கியுடன் ஒப்பந்தம்

கொழும்பு, நவ. 06

பணமோசடி மற்றும் பயங்கரவாத நிதிக்கு எதிரான தேசிய வேலைத்திட்டத்தை வலுப்படுத்தும் வகையில், இலங்கை மத்திய வங்கிக்கும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான தேசிய செயலகத்திற்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் நேற்று கைச்சாத்திடப்பட்டது.

நிதிப்புலனாய்வுப் பிரிவின் அலுவலகத்தின் பணிப்பாளர் நாயகம் சஞ்சீவ விமலகுணரத்னவும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டார்.

மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தலைமையில் இந்நிகழ்வு இடம் பெற்றது.

நாட்டின் நிதி ஒருமைப்பாட்டிற்கு இது ஒரு முக்கிய நடவடிக்கை எனவும், அரச நிறுவனங்களுக்கிடையில் பக்கச்சார்பற்ற ஒருங்கிணைப்பின் முக்கியத்துவத்துவமும் வலியுறுத்தப்பட்டது.

மத்திய வங்கியின் பிரதி ஆளுநர்கள், உதவி ஆளுநர்கள் உட்பட நிதிப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள், அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான தேசிய செயலகத்தின் பணிப்பாளர் உள்ளிட்டோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (அ)

# கண்டி-முருதலாவை வீதியில் மண் சரிவு!

கொழும்பு, நவ. 06

கடும் மழையினால் கண்டி-முருதலாவை வீதியில் கன்னொருவ பெரிய வளைவுக்கு அருகில் மண்சரிவு ஏற்பட்டுள்ளது.

இதனால் குறித்த வீதியுடனான கனரக வாகனங்களின் போக்குவரத்து தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன், ஏனைய வாகனங்களை செலுத்தும்போது மிகவும் அவதானமாக செயல்படுமாறு பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

நிலவும் மழையுடனான வானிலையினால் 08 மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை நீடிக்கப்பட்டுள்ளது.

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகத்தின் மண்சரிவு ஆய்வுகள் மற்றும் எச்சரிக்கை முகாமைத்துவப் பிரிவு இதனை அறிவுறுத்தியுள்ளது. களுத்துறை, கண்டி, கேகாலை, மாத்தறை, இரத்தினபுரி, பதுளை, காலி, குருணாகல் ஆகிய மாவட்டங்களின் பல பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு மண்சரிடிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த மாவட்டங்களுக்கு 01ஆம், 02ஆம் கட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மத்திய, ஊவா, சப்ரகமுவ, வடமத்திய மாகாணங்களிலும், குருணாகல் ஆகிய மாவட்டங்களின் சில இடங்களிலும் 100 மில்லி மீற்றருக்கும் அதிகமான பலத்த மழைவீழ்ச்சி பதிவாகும் சாத்தியம் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

நாட்டின் ஏனைய பகுதிகளில் மாலை அல்லது இரவு வேளையில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக எதிர்வு கூறப்பட்டுள்ளது. (அ)

# வைத்தியர்களின் பணிப்புறக்கணிப்பு நிறைவுக்கு!


கொழும்பு, நவ. 06

காலி - கராபிட்டிய தேசிய வைத்தியசாலையின் வைத்தியர்கள் ஆரம்பித்த தொடர்ச்சியான பணிப்புறக்கணிப்பு கைவிடப்பட்டுள்ளது.

தொடர்புடைய வைத்தியரை பணியிட மாற்றம் செய்ய அதிகாரிகள் இணக்கம் தெரிவித்ததைத் தொடர்ந்து, வைத்தியர்கள் பணிப்புறக்கணிப்பைக் கைவிட்டுள்ளனர். வைத்தியசாலையின் வைத்தியர் ஒருவரால் மற்றைய சில வைத்தியர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் தீர்வு வழங்க வலியுறுத்தி நேற்று காலை 8 மணி முதல் வைத்தியர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

முன்னதாக இதே கோரிக்கையை வலியுறுத்தி வைத்தியர்கள் கடந்த வாரம் 24 மணித்தியால அடையாள பணிப்புறக்கணிப்பை முன்னெடுத்திருந்தனர். இதனிடையே சம்பவத்துடன் தொடர்புடைய வைத்தியர் மஹரகம அபெக்ஷா வைத்தியசாலைக்கு மாற்றம் செய்யப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

பாராளுமன்றத் தேர்தல் : 2024



## எமது முன்னுரிமைகளை நிறைவேற்ற எனக்கும் வாக்களியுங்கள்

1. உண்மை, நீதி மற்றும் நல்லிணக்கத்தின் அடிப்படையில், தியாகம் புரிந்தவர்களுக்கும் எதிர்காலச் சந்ததிக்கும் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவோம்.

2. அடையாளம், நிலம், தொன்மை விழுமியங்களைப் பாதுகாக்கும் அடிப்படையில் பெண்கள் மற்றும் இளையோருக்கு சம சந்தர்ப்பத்தை ஏற்படுத்தும் அரசியலை முன்னெடுப்போம்.

3. திறமைக்கு முன்னுரிமை வழங்கி, தொழில் முனைவோருக்கான அரசியல் பொருளாதாரச் சூழலை ஏற்படுத்துவோம்.

4. கடல் மற்றும் நில வளங்களைப் பாதுகாப்பதுடன் நவீன தொழில்நுட்பத்துடன் விவசாய உற்பத்தி வருமானத்தையும் மேம்படுத்துவோம்.

5. மாணவர்களுக்கு சமமான வளங்களையும் வாய்ப்புக்களையும் ஏற்படுத்தி, விஞ்ஞான ரீதியாக அறிவூட்டப்பட்ட சமூகத்தை உருவாக்குவோம்.

6. ஒடுக்கப்பட்டவர்கள், போரினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான சம வாய்ப்புகளை உருவாக்குவோம்.

7. குறுகிய கால அரசியல் இலாபங்களுக்காக பல்வேறுபட்ட காரணிகளால் அரசியல் பிளவுகுட்பட்டுள்ள தமிழ் மக்களை ஒருமித்த அரசியல் கூட்டுக்குரலாக மாற்றுவதற்கான அணிதிரட்டலை இலகுபடுத்தல்.



சந்திரகாசன் இளங்கோவன்
இலங்கைத் தமிழரசுக் கட்சி

அரசியல், சமூக மற்றும் பொருளாதார விடியலை நோக்கி ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணத்திற்கு நாம் சோரம் போனால் பிணத்தையும் பாதுகாக்கமுடியாது!

## தமிழரசு வேட்பாளர் ஜெயசிறில்

அம்பாறை, நவ. 06

**"இன்று மின்சாரம் தாக்கி மரணித்த இளைஞனை திருக்கோவில் ஆதரவைத்தியசாலை பிரேத அறையில் வைப்பதற்கு குளிரூட்டி இல்லை. இன்னும் இன்னும் பணத்திற்கு தமிழ் மக்கள் சோரம் போனால் இவ்வாறான அவலங்கள் தொடரும். பிணத்தைக் கூட பாதுகாக்க முடியாத அவலநிலை தோன்றும்."**

-இவ்வாறு, இலங்கை தமிழரசுக் கட்சியின் அம்பாறை மாவட்ட வேட்பாளரும், காரைதீவு முன்னாள் தவிசாளருமான கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் திருக்கோவில் பிரதேச குடிநில மக்களுடன் உரையாடுகையில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அம்பாறை மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான தமிழ் பிரதேச வைத்தியசாலைகள் மிகவும் அவலமான நிலையில் இருக்கின்றன. அரச மாற்றின அரச பயங்கரவாதத்தின் விளைவே இது. பொத்துவில் தொடக்கம் தம்பட்டை வரையிலான பெருநிலப்பரப்புக்குரிய ஒரே ஒரு சுகாதார சேவை வழங்கும் வைத்தியசாலையாக திருக்கோவில் ஆதார வைத்தியசாலை திகழ்கிறது. 25 டாக்டர்கள் இருக்க வேண்டிய வைத்தியசாலையில் இன்று ஆக 6 டாக்டர்கள் கடமை ஆற்றுகிறார்கள். பிரேத அறைக்கு குளிரூட்டி இல்லை. இடையிடையே அன்புலன்ஸ் பழுது.

இவ்வாறு பல குறைபாடுகள் இருக்கின்றன. இந்த ஏழை மக்களுக்கு சுகாதாரசேவை செய்ய வேண்டிய வைத்தியசாலையின் அவலத்தை பாருங்கள். முன்பிருந்தவர்களும் சரி இன்றும் சரி அதனை வெறுமனே பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். நான் பாராளுமன்ற உறுப்பினரானால் முதலில் இந்த வைத்தியசாலையை நிச்சயம் கவனிப்பேன்.

தேர்தல் வந்தால் பணத்தின் பின்னால் அலையும் கொள்கை இல்லாதவர் நம் மத்தியில் இருக்கிறார்கள். அவர்கள் சொந்த ஊரையே காட்டிக் கொடுப்பார்கள்.

தமிழன் தமிழரசு கட்சியின் பக்கம் சாயாமல் வேறு கட்சியின் பக்கம் எதற்காக சாய்கிறான் என்ற உண்மை இந்த பணம் தான்.

இதனை மக்கள் அறிந்தும் அறியாமல் இருக்கின்றீர்களா என்னவென்பது உண்மைக்கு புறம்பாகவே உள்ளது.

தமிழரசுக் கட்சி எந்த பணத்திற்காகவும் எவர்பக்கமும் சாயவில்லை .தமிழ் இனத்தின் விடிவுக்காக கொள்கை மாறாமல் திடமாக நிற்கின்றார்கள். உண்மையில் தமிழ் மக்களாகிய நாங்கள் எப்பயாவது ஒரு கணம் ஆலோசித்து பார்த்ததுண்டா?

தேர்தல் முடிந்தால் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதியையும் முடிந்துவிட்டது. பாமர மக்களை ஏமாற்றும் மாற்றுக் கட்சிக்கு துணை போகும் ஆதரவாளர்கள் பணத் தொகையை பெற்றுக்கொண்டு காலாகாலம் தொட்டு ஏமாற்றி வருகின்றார்கள். இதில் பல குற்றச்சாட்டுகள் தமிழரசு கட்சியின் மீது வைக்கின்றார்கள். செய்த தவறுகள் அனைத்தும் அவர்களே- என்றார்.

(அ)

# முஸ்லிம் தலைமைகளை வேரறுக்க தேசிய மாற்றத்துக்குள் சதித்திட்டம்!

## மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத்

மன்னார், நவ. 06

முஸ்லிம் தலைமைகளை அரசியலிலிருந்து ஓரங்கட்டும் சதி முயற்சிகளிலிருந்து சமூகம் விழிப்படைய வேண்டும் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் ஐக்கிய மக்கள் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட முதன்மை வேட்பாளருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் உலமாக் குழுவின் ஏற்பாட்டில், "சிறுபான்மை பிரதிநிதித்துவமும் உலமாக்களின் பங்களிப்பும்" என்ற கருப்பொருளில், வன்னி மாவட்ட உலமாக்களுக்கான மாநாடு மன்னாரில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் மேற்கண்டவாறு கூறினார்.


அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேசிய மக்கள் சக்தி வென்றுவிட்டது என்பதற்காக, முஸ்லிம் பிரதிநிதித்துவங்களை இல்லாதொழிக்க விரும்புகின்றீர்களா? பாராளுமன்ற அரசியலில், சமூகங்களுக்கென்று தனித்தனி பிரதிநிதித்துவங்கள் அவசியம். தேசிய அரசியலில் மாற்றம் ஏற்பட்டுள்ளமைக்காக, சமூகங்களின் பிரதிநிதித்துவங்களை இல்லாமற் செய்ய இயலாது. எம்மத்தியில் உள்ள சிலர் இவ்வேலைகளைச் செய்வதற்கு துணிந்துள்ளனர். இந்த சதிகளுக்கு துணைபோயுள்ள நமது சகோதரர்களுக்கு வழிகாட்ட வேண்டிய பொறுப்பு உலமாக்களுக்கும் உள்ளது.

பிரதிநிதித்துவங்கள் இல்லாத சமூகங்கள், திசை தவறும் ஆபத்துக்களை எதிர்கொள்ளலாம். முறையான தலைமைத்துவங்கள் இருந்தபோதும், உணர்ச்சி, எழுச்சிகள் ஏற்பட்டதால், தமிழ் இளைஞர்கள் தவறான வழி சென்ற வரலாறு நமது நாட்டில் உள்ளது. இதனால், ஏற்பட்ட யுத்தம் சகல சமூகங்களையுமே பாதித்திருந்தன. இதுபோன்ற எழுச்சியை, இப்போது ஏற்பட்டுள்ள மாற்றமும் ஏற்படுத்துமோ என நாங்கள் அஞ்சுகின்றோம்.

புத்தளத்தில், ஒரு முஸ்லிம் எம்.பி. வரக்கூடாதென்று முஸ்லிம்களையே சதி செய்யத் தூண்டியுள்ளனர். கொழும்பில் முஜிபுர் ரஹ்மான் வரக்கூடாதா? கண்டியில், ரவூப் ஹக்கீம் வென்றால் இவர்களுக்கென்ன பிரச்னை. வன்னியில், எனது தலைமைத்துவத்தை வேரறுக்கவும் வியூகங்கள் வகுக்கப்படுகின்றன.

தேசிய கட்சிகளின் கைப்பொம்மைகளாக இருக்கப்போகும் முஸ்லிம் பிரதிநிதித்துவத்தால் எந்தப் பிரயோசனமும் ஏற்படாது-என்றார். (அ)



# கமலரூபன் காரைநகரில் பிரசாரம்

யாழ்ப்பாணம், நவ. 06

பாராளுமன்றத் தேர்தலில், யாழ்ப்பாண மாவட்டத்தில், சுயேச்சைக்குழு 2 ஊஞ்சல் சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர் சட்டத்தரணி ஈ.ஸ்.பி நாகரத்தினம் கமலரூபன், காரைநகரில், விளையாட்டுக் கழக வீரர்களுடன் சந்திப்பில் ஈடுபட்டார்.

விளையாட்டுக்கழக வீரர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டதுடன், அவற்றுக்கான தீர்வுகளை எட்டுவதற்கான வழிவகைகள் தொடர்பிலும் கலந்துரையாடினர்.

அத்துடன், தனது அரசியல் பிரவேசத்திற்கான காரணம் மற்றும் எதிர்கால திட்டங்கள் தொடர்பிலும், வேட்பாளர் ஈ.ஸ்.பி நாகரத்தினம் கமலரூபன், வீரர்களுக்கு விளக்கமளித்தார். (அ)

# பனை அபிவிருத்திச் சபையின் தலைவராக மோசடி மிக்க நபர்!

## சாடுகின்றது ஈ.பி.டி.பி.

யாழ்ப்பாணம், நவ. 06

யாழ்ப்பாணத்தில் உள்ள பனை அபிவிருத்தி அதிகார சபையின் தலைவராக ஊழல் மோசடி நிறைந்த ஒருவரை நியமித்துள்ளமையானது ஜனாதிபதி அனுரகுமார திசநாயக்கவின் ஊழலற்ற தேசம் என்ற நிலைப்பாட்டை கேள்விக்குறியாக்கியுள்ளது என ஈ.பி.டி.பியின் ஊடக பேச்சாளரும் பாராளுமன்ற தேர்தல் வேட்பாளருமான ஐயாத்துரை சிறீரங்கேஸ்வரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

யாழ்ப்பாணம் ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் -

தற்போதைய ஜனாதிபதி அனுரகுமார திஸநாயக்க ஊழலை ஒழிப்போம் ஊழல் வாதிகளுக்கு தமது அரசில் எந்தவொரு இடத்திலும் பதவி நிலை வழங்கப்படாது என கருத்தை முன்வைத்தே ஆட்சி அதிகாரத்தை பெற்றுக்கொண்டார்.

இந்நிலையில் தற்போது யாழ்ப்பாணத்தில் உள்ள பனை அபிவிருத்திச் சபையின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளவர் தனியார் நிறுவனங்களில் பதவி நிலை வகித்து பல்வேறு வகைகளில் பல கோடிகளை ஊழல் மோசடிகளை செய்தவர் என கூறப்படுகின்றது. இவை கடந்த காலங்களில் சமூக ஊடகங்களிலும் வெளியாகியிருந்தன.

அந்தவகையில் இவ்வாறான ஒரு மோசடி மிக்க நபரை பனை அபிவிருத்திச் சபையின் தலைவராக நியமித்தமையானது ஜனாதிபதி அனுரவின் கருத்தை அல்லது அவரது நிலைப்பாட்டை கேள்விக்குறியாக்கியுள்ளதுடன் அவருக்கு வாக்களித்த மக்களையும் விசனமடைய செய்துள்ளது. குறிப்பாக பனைசார் உற்பத்தி தொழிலை முன்னெடுக்கும்




மக்களை பெரும் சங்கடத்துக்கும் உள்ளாக்கியுள்ளது.

அத்துடன் அத்துறை சார்ந்தவர்களின் உழைப்பும் முதலீடுகளும் கேள்விக்குறியாக இருந்து வரும் நிலையில் இந்த நியமனத்தால் மேலும் பாதிப்பை எதிர்கொள்ளவுள்ளது.

அத்துடன் இவ்வாறான நியமனம் அந்த மக்களை மேலும் மன ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் பாதிக்கும் வகையில் அமையும். இது தொடர்பில் ஜனாதிபதி அவதானம் செலுத்த வேண்டும்-என்றார். (அ-05)

# ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் ஆலையடிவேம்பு காரியாலயம் திறப்பு

அம்பாறை, நவ. 06

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின், அம்பாறை அக்கரைப்பற்று ஆலையடிவேம்பு பிரதேச தேர்தல் காரியாலயம் நேற்று முன் தினம் மாலை திறந்து வைக்கப்பட்டது. ஈரோஸ் ஜனநாயக முன்னணியின் மாவட்ட செயலாளர் க. வசந்தன் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் வேட்பாளர்களான சோ.புஸ்பராசா, சுப்ரமணியம் தவமணி, ஆகியோரும் கிழக்கு தமிழர் ஒன்றிய செயலாளர் ஓய்வு நிலை பிரதிக்கல்விப்பணிப்பாளர் வா.குணாளன் ஆலையடிவேம்பு பால் பண்ணையாளர்கள் சங்க தலைவர் எஸ்.விக்னேஸ்வரன், வம்மியடிகுள மீன்பிடிசங்கத்தலைவர் ஆ.பேரின்பராசா உட்பட பெருமளவான பொது மக்களும் கலந்து கொண்டனர். (அ)

# இலங்கை தமிழரசுக் கட்சி மட்டக்களப்பில் பிரசாரம்

மட்டக்களப்பு, நவ. 06

இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில், மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடும், அ.கருணாகரனின் பிரசாரக் கூட்டம் கொக்கட்டிச்சோலையில் நடைபெற்றது.

இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில், மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடும் அ.கருணாகரனின் பிரசாரக் கூட்டம் நேற்று முன்தினம் கொக்கட்டிச்சோலை அரசடித்தீவுப் பகுதியில் நடைபெற்றது.

தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர்கள், ஆதரவாளர்கள், பிரதேச மக்கள் என பலரும் பிரசாரக் கூட்டத்தில் பங்கேற்றனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டு மக்களின் சுதந்திரத்தை நாங்கள் உறுதி செய்துள்ளோம்!

## ஜனாதிபதி அநுர கூறுகிறார்

கொழும்பு, நவ. 06

**நாட்டில் அரசியல் கலாசாரத்தை மாற்றியமைப்பதே தேசிய மக்கள் சக்தியின் எதிர்ப்பார்ப்பாகும் என ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.**

மொனறாகலை பிரதேசத்தில் இடம்பெற்ற தேசிய மக்கள் சக்தியின் மக்கள் பேரணி கலந்துகொண்டு உரையாற்றிய போதே அனுரகுமார திஸாநாயக்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

அரசியல்வாதி ஒரு குறிப்பிட்ட கட்டமைப்பில் செயல்பட வேண்டும்.அரசியல்வாதி சட்டத்திற்குக் கீழ்ப்படிய வேண்டும்.அரசியல்வாதி நாகரீகமான சட்டத்தில் இருக்க வேண்டும்.

சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற கருத்துடன் செயல்படுகின்றோம் தேசிய மக்கள் படையின் முதலாவது வரவு செலவு திட்டத்தில் அரச துறையினரின் சம்பளம் அதிகரிக்கப்படும். தனியார் துறையினருடன் பேச்சுவார்த்தை நடத்தி அவர்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளோம்.கிராமப்புற மக்களை வறுமையில் இருந்து விடுவிக்க வேண்டும்.

வறுமை ஒழியும் வரை அவர்களை பாதுகாப்போம். பாடசாலை மாணவர்களுக்கு சில கொடுப்பனவுகளை வழங்குவதற்கு திட்டமிட்டுள்ளோம். நாம் ஆட்சிக்கு வந்து சிறிது நாட்களிலேயே உர மானியம் பதினைந்திலிருந்து இருபத்தைந்தாயிரம் ஆக உயர்த்தப்பட்டது. மீனவர்களுக்கு எரிபொருள் மானியம் வழங்கப்பட்டது.



ஓய்வூதியர்களின் சம்பளம் கடந்த ஒக்ரோபர் மாதம் முதல் மூவாயிரம் ரூபாவால் அதிகரிக்கப்பட்டது. டிஜிற்றல் மயமாக்கல். இந்த நாட்டை தூய்மையான நாடாக மாற்றும் திட்டத்தை தேசிய மக்கள் சக்தி செயல்படுத்தி வருகிறது, சிறுவர்களுக்கு சிறந்த எதிர்காலத்தை கட்டியெழுப்ப பாடுபடுவோம், நாட்டு மக்களின் சுதந்திரத்தை தேசிய மக்கள் சக்தி உறுதி செய்துள்ளது-என்றார்.

(அ)

# நாட்டை பிளவுபடுத்த இடமளிக்கமாட்டோம்!

## நாமல் ராஜபக்ஷ திட்டவட்டம்


கொழும்பு, நவ. 06

நாட்டை பிளவுபடுத்துவதற்கு ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை என பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்தில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டைப் பிளவுபடுத்துவதற்கு சிலர் முயற்சித்து வருகிறார்கள். அதன்மூலம் இன ரீதியான பாகுபாடு ஏற்படும். ஆதலால் அதற்கு நாம் ஒருபோதும் இடமளிக்க மாட்டோம். நாட்டில் இறுதியாக இடம்பெற்ற தேர்தலில் நாம் பின்னடைவை சந்தித்தோம். வேறு கட்சியினர் போலியான வாக்குறுதிகளை மக்கள் நம்பும் விதமாக கூறியதாலேயே எமக்கு இந்தப் பின்னடைவு ஏற்பட்டது. ஆனால் அந்த உறுதிமொழிகள் நிறைவேற்றப்பட்டனவா என்பது குறித்து மக்கள் சிந்திக்க வேண்டும். முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவின் ஆட்சிக்காலத்திலேயே பெரும் அளவிலான அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. உள்நாட்டு விவசாயிகள், தொழில்முயற்சியாளர்கள், உற்பத்தியாளர்கள் பாதுகாக்கப்பட்டனர். அவ்வாறானதொரு யுகத்தை மீண்டும் உருவாக்க வேண்டும்-என்றார்.



# "அரசியல் வரலாற்றில் எந்தவொரு கறுப்புப் புள்ளியும் எனக்கு இல்லை!"

கொழும்பு, நவ. 06

அரசியல் வரலாற்றில் எந்தவொரு கறுப்புப் புள்ளியும் தனக்கு இல்லை என்பதனாலேயே மக்கள் ஆணைகோரி பொதுத்தேர்தலில் முன்னிலையாகியுள்ளதாக ஐக்கிய ஜனநாயகக்குரல் கட்சியின் தலைவர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார்.

பொலனறுவையில் இடம்பெற்ற மக்கள் பேரணியில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே ரஞ்சன் ராமநாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஊழல் மோசடிகள், இலஞ்சம் கோரல், போதைப்பொருள் வர்த்தகம் போன்ற மோசடிகளில் ஈடுபட்ட வரலாறு எமக்கு இல்லை.

அவ்வாறான செயல்களில் ஈடுபடுவோருக்கு எதிராக குரல் கொடுத்தமையினாலேயே நான் நாடாளுமன்றுக்கு மூன்று தடவைகள் அதிக வாக்குகளுடன் தெரிவு செய்யப்பட்டேன். அரசியல்வரலாற்றில் எந்தவொரு கருப்புபுள்ளியும் எமக்கு இல்லை என்பதனாலேயே இன்றும் தேர்தலில் முன்னிலையாகியுள்ளோம். அதனாலேயே இன்று தலைநிமிர்ந்து உங்கள் முன்நிற்கின்றோம்.

ரஞ்சன் ராமநாயக்க ஊழல்வாதி, கள்வன் என ஆளுந்தரப்பினாலும் எதிர்த்தரப்பினாலும் என்மீது குற்றம் சுமத்தமுடியாது. நான் ஊழல்வாதியும் அல்ல இலஞ்சம் பெறுபவனும் அல்லன்.

அவ்வாறானவர்களுக்கு எதிராக நாடாளுமன்றில் உண்மையை பேசியவன் நான்.எனவே மக்கள் தைரியமாக தன்னம்பிக்கையுடன் எமக்கு வாக்களிக்க முன்வரவேண்டும் என கேட்டுக் கொள்கின்றேன் -என்றார்.

(அ)

# தேர்தல் வாக்குறுதிகளில் ஒன்றைக்கூட அநுர அரசாங்கம் நிறைவேற்றவில்லை!

## ரணில் விக்கிரமசிங்க குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 06

நாட்டை தொடர்ந்தும் ஆட்சி செய்ய முடியாது என்பதை தற்போதைய அரசாங்கம் நிரூபித்துள்ளதாக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்,

மாத்தறையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைத்தபோதே ஜனாதிபதி ரணில் விக்கிமசிங்க இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசாங்க ஊழியர்களுக்கு வழங்குவதற்கு எமது அரசாங்கத்தில் நடவடிக்கை எடுத்திருந்தோம். ஜனாதிபதி அநுரகுமார உடனடியாக அதனை வழங்க வேண்டும். ஜனாதிபதி அநுரகுமார தேர்தல்கால வாக்குறுதி



கள் எதனையும் நிறைவேற்றவில்லை. அவருக்கு மீண்டும் தேர்தல் கேட்கும் உரிமை இல்லை.

தற்போதைய அரசாங்கம் அரசாங்க ஊழியர்களின் வாக்குகளினால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பதாக வாக்குறுதியளித்தது. இந்த நாட்டின் பொருளாதாரத்தை பாதுகாத்து மக்களுக்கு நிவாரணம் வழங்க அனுபவமிக்க குழுவொன்றை பாராளுமன்றத்துக்கு மக்கள் தெரிவு செய்யவேண்டும்.

தம்மால் இந்த நாட்டை ஆட்சி செய்யமுடியாது என்பதை இந்த அரசாங்கம் நிரூபித்துள்ளது. தேர்தல் கால வாக்குறுதிகளில் ஒன்றையேனும் அரசாங்கம் இதுவரை நிறைவேற்றவில்லை. எரிபொருள் விலை குறைக்கப்படவில்லை. எரிவாயு விலை குறைக்கப்படவில்லை. பொருட்களின் விலைகளும் குறைக்கப்படவில்லை. வரிகுறைப்பும் மேற்கொள்ளப்படவில்லை. இந்த அரசாங்கம் வாக்குறுதிகளை வழங்கியே ஆட்சிக்கு வந்தது. ஆனால் அவை அனைத்தும் இன்று காலாவதியாகியுள்ளன-என்றார். (அ)

# மக்கள் மத்தியில் நகைச்சுவையாளராக மாறியிருக்கிறார் நனாதிபதி அநுரகுமார!

## சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டு



கொழும்பு, நவ. 06

"அனுரகுமார திஸாநாயக்க மக்கள் மத்தியில் நகைச்சுவையாளராக மாறியுள்ளார்"என முன்னாள் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

பொதுத்தேர்தல் நிலவரம் குறித்து கருத்துத் தெரிவித்த போதே சஜித் பிரேமதாச இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

உகண்டாவில் பதுக்கி வைக்கப்பட்டுள்ள பணத்தை மீண்டும் நாட்டுக்குக் கொண்டு வருவதாகக் கூறிய ஜனாதிபதி அனுரகுமார தற்போது மக்கள் மத்தியில் நகைச்சுவையாளராக மாறியுள்ளார்.

இலங்கையிலிருந்து உகண்டாவுக்கு கொண்டு செல்லப்பட்ட ஊழல்வாதிகளின் பணத்தை தற்போதைய அரசாங்கம் மீட்டு வரும் என மக்கள் காத்திருக்கின்றனர்.

எனினும் பணத்தை பதுக்கி வைத்தவர்கள் அதில் நல்ல வட்டிகளை உழைத்து சுகபோகமாக வாழ்கின்றனர். ஆட்சிக்கு வந்ததிலிருந்து தேசிய மக்கள் சக்தி சிறந்த நகைச்சுவைகளைக் கூறிவருகின்றது.

மக்களை ஏமாற்றி ஒருபோதும் நாட்டை ஆட்சி செய்ய முடியாது. இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்து, கடவுச்சீட்டு வரிசைக்குத் தீர்வு வழங்குவதற்குப் பதிலாக புதிய வரிசைகளை ஏற்படுத்திவருகிறது.

பொருட்கள் விலை மற்றும் வரி குறைப்புகளை மேற்கொள்ளவில்லை. சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தை மாற்றியமைப்பதாகக் கூறிய அநுர அரசாங்கம் இன்று அவர்களிடம் மண்டியிட்டுள்ளது-என்றார்.

(அ)

# ஜனாதிபதி நாட்டுமக்களிடம் மன்னிப்புக் கோர வேண்டும்!

கொழும்பு, நவ. 06

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை தேர்தலுக்கு முன்னர் நிறைவேற்று வேண்டும், இல்லாவிட்டால் மக்களிடம் மன்னிப்பு கோர வேண்டும் என புதிய ஜனநாயக முன்னிணியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் அஸாத் சாலி தெரிவித்தார்.

கொழும்பில் நடத்திய விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தேர்தல் காலத்தில் பல்வேறு வாக்குறுதிகளை மக்களுக்கு வழங்கி இருந்தார். அவரின் வாக்குறுதிகளை நம்பியே மக்கள் அவருக்கு வாக்களித்து ஜனாதிபதியாக்கி இருக்கிறார்கள்.

ஆனால் ஜனாதிபதியாக பதவி ஏற்று ஒரு மாத காலம் கடந்தும் அளித்த வாக்குறுதிகளில் ஒன்றையேனும் நிறைவேற்ற அநுரகுமார திஸாநாயக்கவுக்கு முடியாமல் போயிருக்கிறது.

தற்போது பாராளுமன்ற தேர்தல் பிரசாரங்களுக்கு செல்லும் ஜனாதிபதி, தான் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை இதுவரை நிறைவேற்ற முடியாமல் போனமைக்காக மக்களிடம் மன்னிப்பு கேட்கவேண்டும். -என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கில் பல்துறை சார் மானிய உதவிகளுக்கு 2.35 பில்லியன் நிதி

## இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா தெரிவிப்பு



திருகோணமலை, நவ. 06

**கிழக்கு மாகாணத்தின் பல்துறைசார் மானிய உதவிகளுக்கு 2. 35 பில்லியன் இலங்கை ரூபாய்களை ஒதுக்க இந்தியா உறுதியளித்துள்ளதாக இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா தெரிவித்தார்.**

திருகோணமலை திருக்கடலூர் ஆழ்கடல் மீனவர்கள் வர்த்தக சங்க கட்டடத்தில் மீனவர்களுக்கான மீன்பிடி உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிழக்கு மாகாணத்தின் பல்துறை சார் மானிய உதவிகளுக்கென, சுமார் 2. 35 பில்லியன் இலங்கை ரூபாய்களை ஒதுக்க இந்தியா உறுதியளித்துள்ளது. மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு 33 திட்டங்களுக்கான, கட்டமைப்புத் திட்டங்கள் உறுதி செய்யப்படவுள்ளன. இவற்றில், 7 மீன்பிடித் திட்டங்களை கிழக்கு மாகாணத்தின் மூன்று மாவட்டங்களிலும் மேற்கொண்டு அவர்களுக்காக மீன்பிடி உபகரணங்களை வழங்குவது மட்டுமல்லாமல், நன்னீர் அலங்கார மீன் வளர்ப்பு, கடற்பாசி கூண்டு வளர்ப்பு, திலாப்பியா குளத்து மீன் வளர்ப்பு மற்றும் பருவகால தொட்டி மேம்பாடு போன்றவை உள்ளடங்கியுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், இந்த உதவிகள் உங்கள் வாழ்வில் நல்ல மாற்றத்தை ஏற்படுத்தும் என்று நம்புகிறேன். நீங்கள் இந்தப் பிராந்தியத்தின் முதுகெலும்பு. உங்கள் வெற்றி ஒட்டுமொத்த சமூகத்துக்கும் கிடைத்த வெற்றியாகும். உங்கள் வலைகள் எப்போதும் நிரம்பியிருக்கவும், கடலுக்குச் செல்லும் எமது மீனவ உறவுகள் அனைவரும் பாதுகாப்பாக கரைக்குத் திரும்பவும் வேண்டி இறைவனை பிரார்த்திக்கின்றேன் என்றும் அவர் கூறினார். (எ)



# நடமாடும் நூலகம் திறப்பு

கல்முனை, நவ. 06

"வழி காட்டும் தாரகைகளாம் நூல்கள் வாசிப்பால் வென்றிடுவோம் நாங்கள்" எனும் தொனிப்பொருளில் நடமாடும் நூலகம் திறந்து வைக்கும் நிகழ்வு கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியின் நூலக பொறுப்பாளர் ஏ. எல். நளீம் தலைமையில் பச்சை வீடு கூடத்தில் நடைபெற்றது.

மிகச் சிறப்பான நெறிப்படுத்தலின் கீழ் நடைபெற்ற இந்த நடமாடும் நூலகத் திறப்பு விழாவில் கல்லூரியின் அதிபர் ஏ. பி. நஸ்மியா சனூஸ் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பித்தார். (எ)

# தபால்மூல வாக்களிப்பு

அக்கரைப்பற்று, நவ. 06

அக்கரைப்பற்று கல்வி வலயத்தின் கீழுள்ள பாடசாலை ஆசிரியர்கள், அதிபர்கள், கல்விசாரா உத்தியோகத்தர்கள் அக்கரைப்பற்று கல்வி வலயத்தில் ஏற்படுத்தப்பட்ட வாக்களிப்பு நிலையங்களில் தபால் மூல வாக்களிப்பில் ஈடுபட்டனர்.

அக்கரைப்பற்று மற்றும் அட்டாளைச்சேனை கல்விக் கோட்டங்களைச் சேர்ந்தவர்கள் இங்கு வாக்களித்தனர். இவ்விரு கல்விக் கோட்டங்களிலும் 590 ஆசிரியர்கள் மற்றும் கல்வி சாரா உத்தியோகத்தர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர். காலை 8. 30 மணிக்கு வாக்களிப்பு ஆரம்பமானது.

அக்கரைப்பற்று கல்விக் கோட்டத்தில் 310 பேரும், அட்டாளைச்சேனை கல்விக் கோட்டத்தில் 280 பேரும் வாக்களிக்க தகுதி பெற்றனர். (எ)

# திருகோணமலையில் நாளை குடிநீர் விநியோகம் துண்டிப்பு

திருகோணமலை, நவ. 06

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் திருகோணமலை, கந்தளாய் நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் அவசர திருத்தவேலை காரணமாக நாளை 07 ஆம் திகதி காலை 6 மணி தொடக்கம் இரவு 10 மணிவரை குடிநீர் விநியோகத் துண்டிப்பு இடம்பெறவுள்ளதாக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் பிராந்திய முகாமையாளர், பொறியியலாளர் எல். சுபாகரன் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய், தம்பலகாமம், கிண்ணியா, திருகோணமலை பட்டினமும் சூழலும் ஆகிய பிரதேச செயலகப் பகுதியிலும், குச்சவெளி பிரதேச செயலக பகுதியின் இறக்கக் கண்டி பாலம் வரையான பகுதியிலும் குடிநீர் விநியோகம் துண்டிக்கப்படும். எனவே, முன் கூட்டியே போதுமான நீரை சேமித்து வைக்குமாறு அறிவித்துள்ளார்.

இதன்மூலம் பாவனையாளர்களுக்கு ஏற்படும் தடங்கலுக்கு தங்களது வருத்தத்தையும் நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையினர் தெரிவித்துள்ளனர். (எ)

# பெரியதம்பிப்பிள்ளையின் 46 ஆவது நினைவுதினம்



மட்டக்களப்பு, நவ. 06

இலங்கையின் புகழ் பூத்த எழுத்தாளர் பண்டிதமணி பெரியதம்பிப்பிள்ளை யின் 46 ஆவது நினைவுதினம் அனுஷ்டிக்கப்பட்டது.

இலக்கிய கலாநிதி பெரியதம்பிப்பிள்ளையின் 46 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை நினைவு மன்றத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட அஞ்சலி நிகழ்வு மட்டக்களப்பு புளியந்தீவு மத்தியில் அமைக்கப்பட்டுள்ள சிலையடியில் நடைபெற்றது.

புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை 'உள்ளதும் நல்லதும்' எனும் இலக்கிய நூல் மூலம் இலக்கியத்துறையில் சஞ்சரித்து பல இலக்கிய நூல்களையும், தமிழ்மொழி சார்ந்த சஞ்சிகைகளையும், நூல்களையும் உருவாக்கி தமிழ்த்துறைக்கு பெரும் பங்களிப்பு செய்துள்ளார். மண்டூர் மண்ணில் அவதரித்த இவர் 1978. 11. 02 ஆம் திகதி இயற்கை எய்தினார்.

இந்த நினைவுதினத்தில் பெரியதம்பிப்பிள்ளையின் இலக்கியப்பணி, சமூகசேவை, கல்விப்பணிகள் பற்றி நினைவுகூரப்பட்டு அவரது சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டு மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. (எ)

# கிழக்கு மாகாண இலக்கிய விழாவில் விருது பெறும் கலைஞர்கள் விவரம்

மட்டக்களப்பு, நவ.06

கிழக்கு மாகாணத்தில் 2024 ஆம் ஆண்டுக்கான இலக்கிய விழாவில் விருது பெறும் கலைஞர்களின் விவரம் வெளியிடப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் சரவணமுத்து நவநீதன் இந்த விவரத்தை வெளியிட்டுள்ளார்.

வித்தகர் விருது,

ஜனாப். ஹயாத்து முஹமது ஹலால்தீன் (இலக்கியம்) - திருகோணமலை,

திருமதி பரமேஸ்வரி இளங்கோ (இலக்கியம்) - மட்டக்களப்பு,

ஜனாப் உதுமாலெப்பை முகம்மது பௌஸ் (இலக்கியம்) - மட்டக்களப்பு, ஜெயக்கொடி டேவிட் (இலக்கியம்) - அம்பாறை,

பி. டபிள்யு. நந்தினி (இலக்கியம்) - அம்பாறை,

பி. டி. கருணாரட்ண (நாட்டாரியல்) - அம்பாறை,

ஜனாப். உதுமாலெப்பை ஆதம்பாவா (நாட்டாரியல்) - அம்பாறை,

பி. டி. ஜி. பந்துல குமார (ஆற்றுகை) - அம்பாறை,

ஜனாப். சுபைர் ரபீக் (ஊடகம்) - அம்பாறை,

திருமதி சுலோஜனா தேவராஜன் (ஆற்றுகை) - திருகோணமலை,

திருமதி இந்திராகாந்தி இராமலிங்கம் (ஆற்றுகை) - திருகோணமலை,

தேவநாயகம் அலோசியஸ் (ஆற்றுகை) - மட்டக்களப்பு,

கலாநிதி முத்துராஜா பிரேம்ராஜ் ரவிச்சந்திரா (பல்துறை) - மட்டக்களப்பு,

திருமதி அல்பேர்ட் சிவகாமிதேவி (பல்துறை) - அம்பாறை,

ஜனாப். அச்சிமுஹமது தாஜீன் (பல்துறை) - அம்பாறை,

இளங்கலைஞர் விருது

ஜனாப். நஸார் முகம்மது இஜாஸ் (இலக்கியம்) - திருகோணமலை, ஜனாபா. றுஸீட் பாத்திமா முஜாமலா (இலக்கியம்) - அம்பாறை,

நதீகா போபிட்டிய (இலக்கியம்) - அம்பாறை,

நில்மினி சமரதுங்க (இலக்கியம்) - அம்பாறை,

ஜனாபா முஹம்மது ஹனிபா ஜிப்ரியா (நாட்டாரியல்) - மட்டக்களப்பு,

தங்கவேல் சுமன் (நாட்டாரியல்) - மட்டக்களப்பு,

ஜனாப். அப்துல் றாசிக் அஹமட் நபாயிஸ் (ஊடகம்) - அம்பாறை,

வேதாரணியம் ஹோகுலர மணன் (நுண்கலை) - மட்டக்களப்பு,

கேதாரிணி சிவானந்தராஜா (ஆற்றுகை) - திருகோணமலை,

ராஜேந்திரம் தனஞ்செயன் (ஆற்றுகை) - மட்டக்களப்பு,

திருமதி ஆர். சி. தரங்கனி (ஆற்றுகை) - அம்பாறை,

கதிரேசன்பிள்ளை சந்திரமோகன் (ஆற்றுகை) - மட்டக்களப்பு, ஆர். எஸ். பள்ளேகெதர (ஆற்றுகை) - அம்பாறை,

சண்முகம்பிள்ளை செல்வபிரகாஸ் (ஆற்றுகை) - மட்டக்களப்பு, சுந்தரலிங்கம் கிஷானி (ஆற் றுகை) - மட்டக்களப்பு,

எச் எம். மாலனி ஹேரத் (ஆற்றுகை) - அம்பாறை,

ஜனாப். ஜூனைட் முஹம்மது இஹ்சான் (பல்துறை) - திருகோணமலை, ஜனாப். முஹம்மது முஸ்தபா ஹிஜாஸ் அஹமட் (பல்துறை) - அம்பாறை,

சிறந்த நூற் பரிசு (சாஹித்ய விருது)

புதுக்கவிதை - "புழுதி" - சிவானந்தராஜா கதன் (காரையன் கதன்) - அம்பாறை,

புலமைத்துவ ஆய்வு - "மட்டக்களப்பு மந்திர சடங்குகள்" அருளானந்தம் சுதர்சன் - அம்பாறை,

மரபுக்கவிதை "நிலவைக் கேட்டுப்பார்" - ஜனாப். முஹம்மது சொலிஹ் அப்துல் ஹை - மட்டக்களப்பு,

நாவல் - "ஆறாத வடு" - முருகையா சதீஸ் - திருகோணமலை,

வரலாறு - "வரலாற்று சிறப்புமிக்க அகஸ்தியர் ஸ்தாபனம்" - தவராஜா தனுஷ்கர் - திருகோணமலை,

சிறுகதை தைலாப் பெட்டி" - ஜனாப். அலியார் பீர் முகம்மது - அம்பாறை,

சிறுவர் இலக்கியம் - "வண்டில் மாமா" - ஜனாப். அ. மீரா முகைதீன் - திருகோணமலை,

நாடகம் - கூத்து - "வீதிநாடகங்கள் பனுவலும் ஆற்றுகையும் - சுந்தரலிங்கம் சந்திரகுமார் - மட்டக்களப்பு,

இலக்கிய சஞ்சிகை - "அவரி" - திருமதி சித்தி மஷூனா சுஹூறுதீன் - அம்பாறை,

நாட்டார் இலக்கியம் - "இளவேனிற் காலமும் கானங்களும்" - ஜனாப் ஐ. ஏ. ஹஸன்ஜி - திருகோணமலை,

சமூக விஞ்ஞானம் (ஆயுள் சுவதம்) - "நலன் தரும் மருத்துவம்" - ஜனாப். முஹம்மது இஸ்மாயில், முஹம்மது பைஸல் - அம்பாறை

ஆ.சமூக விஞ்ஞானம் (ஆன்மீகம்) -"இந்துமத மரணக்கிரியைகளில் சவ அடக்கம் ஒரு பார்வை" - அருளம்பலம் குகராஜா - திருகோணமலை,

சமூக விஞ்ஞானம் (ஜோதிடம்) - "மனையடி சாஸ்த்திரம்" - கணபதிப்பிள்ளை விஸ்வலிங்கம் - மட்டக்களப்பு (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# உக்ரைன் படையினர்மீது ரஷ்யா அதிரடி தாக்குதல்

## ஒரேநாளில் 150 பேர் கொன்று குவிப்பு



மொஸ்கோ, நவ. 06

**குர்ஷ்க் மாகாணத்தில் ரஷ்யா நடத்திய அதிரடித் தாக்குதலில் ஒரேநாளில் உக்ரைன் படையினர் 150 பேர் உயிரிழந்தனர்.**

உக்ரைன்மீது ரஷ்யா தொடுத்த போர் 984ஆவது நாளாக நீடித்து வருகிறது. இந்தப் போரில் துவரை பல்லாயிரக்கணக்கானோர் உயிரிழந்தனர்.

உக்ரைனுக்கு ஆயுத உதவிகளை அமெரிக்கா உட்பட மேற்கத்திய நாடுகள் வழங்கி வருகின்றன. போரை நிறுத்தவும் பல்வேறு நாடுகள் முயற்சித்து வருகின்றன. போர் நிறுத்தம் தொடர்பான பேச்சுகளுக்கு தயாராக இருப்பதாக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தெரிவித்தார். ஆனால், அமைதி பேச்சுகள் தொடர்பில் உக்ரைன் இதுவரை எந்தவித அறிவிப்பும் வெளியிட வில்லை. அதேவேளை, இருநாடுகளுக்கும் இடையே போர் தொடர்ந்து நீடித்து வருகிறது.

இந்த நிலையில், ரஷ்யாவின் குர்ஷ்க் மாகாணத்துக்குள் உக்ரைன் படையினர் நுழைந்தனர். அவர்களை குர்ஷ்க் மாகாணத்தில் இருந்து வெளியேற்றி நகரை மீண்டும் கைப்பற்றும் முயற்சியில் ரஷ்ய படையினர் போரிட்டு வருகின்றனர்.

இங்கு நேற்று முன்தினம் ஒரேநாளில் 150 உக்ரைன் படையினர் கொல்லப்பட்டனர் என்று ரஷ்ய பாதுகாப்புத்துறை தெரிவித்துள்ளது. உக்ரைன் இராணுவ வாகனங்களும் அழிக்கப்பட்டதாக ரஷ்யா தெரிவித்துள்ளது. (எ)



# பூசணிக்காயில் பயணித்து உலக சாதனை படைப்பு

கொலம்பியா, நவ. 06

500 கிலோ பூசணிக்காயை படகாக பயன்படுத்தி 73 கிலோமீற்றர் பயணித்து கின்னஸ் உலக சாதனை படைத்துள்ளார் அமெரிக்காவை சேர்ந்த கேரி கிறிஸ்டன்சென்.

அமெரிக்காவின் ஆரேகான் மாகாணத்தின் ஹேப்பி வேலி பகுதியைச் சேர்ந்தவர் கேரி கிறிஸ்டன்சென். பெரிய பூசணிக்காய் ஒன்றை படகாக பயன் படுத்தி அதில் பயணம் செய்ய வேண்டும் என்பது இவருக்கு பல வருட கனவாக இருந்தது.

இதற்காக, வளர்க்கப்பட்ட பூசணிக்காய், ஒக்ரோபர் தொடக்கத்தில் அறுவடை செய்யப்பட்டது. 429. 26 செற்றி மீற்றர் சுற்றவுடன் 555. 2 கிலோ எடை கொண்டுள்ளது. ஒரு பெரிய பியானோ அல்லது பெரிய ஒட்டகம் அளவுக்கு உள்ள இந்த பூசணிக்காய்க்கு பங்கி லேப்ஸ்டர் என கேரி பெயரிட்டார்.

73.5 கிலோ மீற்றர் பயணம் செய்துள்ளார். இதற்காக 26 மணிநேரம் செலவிட்டுள்ளார். தொடக்கத்தில் பலத்த காற்று வீசியுள்ளது. அலைகளும் அவரை அச்சுறுத்தின. எனினும், துணிச்சலாக படகை செலுத்தி பாதுகாப்பான இடத்தில் இறங்கியுள்ளார். இந்த பயணத்தில் அவர் தூங்காமல் சென்றுள்ளார். அவர் கின்னஸ் உலக சாதனை புத்தகத்திலும் இடம்பிடித்துள்ளார். (எ)

# இந்திய பயணிகளுக்கு வீசா தேவையில்லை

## தாய்லாந்து அறிவிப்பு

பாங்கொக், நவ. 06

இந்திய சுற்றுலாப் பயணிகளுக்கு வீசா தேவையில்லை என்று தாய்லாந்து அறிவித்துள்ளது.

இதனால், இந்திய சுற்றுலாப் பயணிகள் இனி வீசா இன்றி தாய்லாந்து செல்லலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய சுற்றுலாப் பயணிகள் வீசா இல்லாத நுழைவுக் கொள்கையை காலவரையின்றி நீடிப்பதாக தாய்லாந்து அறிவித்துள்ளது. எதிர்வரும் 11 ஆம் திகதியுடன் இந்தக் கொள்கை முடிவடையவிருந்த நிலையில், தற்போது இந்திய சுற்றுலாப் பயணிகள், தாய்லாந்தில் வீசா இல்லாமல் 60 நாட்கள் வரை தங்கியிருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் உள்ளூர் குடியேற்ற அலுவலகங்கள் மூலம் இதை மேலும் 30 நாட்களுக்கு நீடித்து கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# அரசுக்கு எதிராக போராட்டம் நடத்திய 29 சிறுவர்களுக்கு மரண தண்டனை!

## நைஜீரியாவில் தொடரும் சோகம்

அபுஜா, நவ. 06

நைஜீரியாவில் அரசுக்கு எதிராக போராட்டம் நடத்திய சிறுவர்கள் 29 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

நைஜீரியாவில் கடும் பொருளாதார நெருக்கடி நிலவி வருகிறது. பணவீக்கம் உச்சம் தொட்டுள்ளதால், மக்கள் அத்தியாவசியப் பொருட்களை வாங்க முடியாத சூழலில் உள்ளனர்.

இந்த நிலையில், வாழ்வாதாரத்தை மேம்படுத்தக் கோரி, நைஜீரிய இளைஞர்கள் அரசுக்கு எதிராக தீவிர போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர். போராட்டங்களில் ஈடுபடுபவர்கள் மீது நைஜீரிய அரசு கடும் நடவடிக்கை எடுத்து வருகிறது. கடந்த ஓகஸ்ட் மாதத்தில் போராட்டக்காரர்கள் மீது பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 20 பேர் உயிரிழந்தனர். 100 பேர் கைது செய்யப்பட்டனர்.

இதேவேளை, அரசுக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்ட 29 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இவர்கள் அனைவரும் 14 வயது முதல் 17 வயதுக்குட்பட்ட சிறார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்கள் மீது தேசத் துரோகம், கலவரத்தைத் தூண்டுதல் உள்ளிட்ட குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. (எ)

# ஆரம்பித்து 5 நாளில் மூடப்பட்ட புகுஷிமா அணுமின் நிலையம்

ரோக்கியோ, நவ. 06


ஜப்பானில் ஆரம்பிக்கப்பட்டு 5 நாட்களில் புகுஷிமா அணுமின் நிலையம் மீண்டும் மூடப்பட்டுள்ளது.

ஜப்பானில் கடந்த 2011ஆம் ஆண்டு 9 ரிக்டர் அளவிலான பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து ஏற்பட்ட சுனாமியால் புகுஷிமாவில் உள்ள ஒனகாவா அணுமின் நிலையம் கடுமையாக சேதமடைந்தது. இதனையடுத்து அந்த அணுமின் நிலையம் மூடப்பட்டது.

இந்த நிலையில் பராமரிப்பு பணிகள் நிறைவடைந்ததால் கடந்த 29ஆம் திகதி புகுஷிமா அணுமின் நிலையம் திறக்கப்பட்டது. எனவே விரைவில் அங்கு மின் உற்பத்தி தொடங்கும் என எதிர்பார்க்கப்பட்டது.



ஆனால் நியூட்ரான் தரவு தொடர்பான இயந்திரத்தில் கோளாறு ஏற்பட்டதால் திறக்கப்பட்ட 5 நாட்களில் புகுஷிமா அணுமின் நிலையம் மீண்டும் மூடப்பட்டது. (எ)



# அமெ. ஜனாதிபதி தேர்தலில் டொனால்ட் ட்ரம்ப் வெற்றி?

பாங்கொக், நவ. 06

ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வெற்றி பெறுவார் என்று நீர்யானை கணித்துள்ளது.

உலகம் முழுவதும் பெரிதும் எதிர்பார்க்கப்படும் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் நேற்று நடைபெற்றது. இந்த நிலையில் தாய்லாந்தில் 'கா கியோவ்' திறந்த வெளி உயிரியல் பூங்காவில் உள்ள நீர்யானை ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறப் போவது யார் என கணித்த காட்சிகள் அடங்கிய வீடியோ வைரலாகி வருகிறது. குடியரசுக் கட்சி வேட்பாளர் டொனால்ட் ட்ரம்ப் வெற்றி பெறுவார் எனக் கணித்துள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா - அவுஸ்திரேலியா முதல் டெஸ்ட் 22ஆம் திகதி

## ரோஹித் சர்மா விளையாடுவாரா?



மும்பை, நவ. 06

இந்தியா - அவுஸ்திரேலியா இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி எதிர்வரும் 22ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்திய கிரிக்கெட் அணி அடுத்ததாக அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட பார்டர் - கவாஸ்கர் கிண்ண டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது. இதன்படி இவ்விரு அணிகளுக்கும் இடையிலான முதலாவது போட்டி 22ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளது.

ஐ. சி. சி. டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்கு முன்னேற இந்தியா இதில் 4 போட்டிகளில் கட்டாயம் வெற்றி பெற வேண்டும். முன்னதாக அவுஸ்திரேலியாவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் ரோஹித் சர்மா பங்கேற்க மாட்டார் என்ற தகவல்கள் வெளியாகின.

இந்த நிலையில் நியூசிலாந்து அணிக்கு எதிரான டெஸ்ட் தொடர் முடிந்த பின்னர் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்ட ரோஹித் சர்மா, அவுஸ்திரேலியா தொடரின் முதல் போட்டியில் விளையாடுவாரா? என்பது குறித்த தகவலை வெளியிட்டுள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில், "நான் முதல் டெஸ்ட் போட்டிக்கு முன்னதாக அவுஸ்திரேலியா செல்வேனா? என்பது தெரியவில்லை. ஆனால், நிச்சயம் அது குறித்து முடிவெடுத்து உங்களுக்கு அறிவிப்பேன். தற்போதைக்கு எந்த ஒரு முடிவையும் எடுக்கவில்லை"- என்றார். (எ)


# "டோனி சிறந்த தலைவன்"

மெல்பேர்ண், நவ. 06

எம். எஸ். டோனி அணித் தலைவராக இல்லாவிட்டாலும் அவர் சிறந்த தலைவர் மற்றும் வழிகாட்டி என்று அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் ரிக்கி பொன்டிங் புகழாரம் சூட்டியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், "இரண்டு வருடங்களுக்கு முன்பு டோனி மோசமான ஐ. பி. எல். சீசன்களை கொண்டிருந்தார். ஆனால், கடந்த ஆண்டு அவர் பழைய டோனியாக திரும்பி வந்து போட்டிகளில் தாக்கத்தை ஏற்படுத்தினார். சி. எஸ். கே. அணி அவரை முழு சீசனுக்கும் பெற முடியாமல் போகலாம். ஆனால், அவரிடமிருந்து சிறந்ததை பெறுவதற்கு, அவருக்குத் தேவையான ஓய்வு கொடுத்து அணி நிர்வாகம் அவரைப் பயன்படுத்தும். அவர் எந்த அணியில் இருந்தாலும் அணித் தலைவராக இல்லாவிட்டாலும் கூட, சிறந்த தலைவராகவும் சிறந்த வழிகாட்டியாகவும் இருப்பார்.

தற்போது சி. எஸ். கே. அணியில் விளையாடினாலும் விளையாடாவிட்டாலும் அவர் மிகவும் முக்கியமானவர். அவர் களத்துக்கு வெளியே இருந்தும் அணிக்கு தேவையானதை கொண்டு வருவார். அவர் இப்பொழுதும் கடைசி 20 பந்துகளில் போட்டியில் தாக்கத்தை



ஏற்படுத்துகிறார். அவர் இப்படி விளையாடுவதன் மூலமும் போட்டியில் தாக்கத்தை ஏற்படுத்திவிட முடியும் என்று காட்டுகிறார்" என பொன்டிங் கூறினார். (எ)

# இந்திய மகளிர் அணியினர் தரவரிசையில் முன்னேற்றம்



டுபாய், நவ. 06

மகளிர் ஒருநாள் கிரிக்கெட் தரவரிசையில் இந்திய மகளிர் அணியினர் முன்னேறியுள்ளனர்.

இந்த தரவரிசை பட்டியலை சர்வதேச கிரிக்கெட் பேரவை (ஐ. சி. சி.) வெளியிட்டுள்ளது.

நியூசிலாந்து மகளிர் கிரிக்கெட் அணி அண்மையில் இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடியது. இந்த தொடரை 2 - 1 என்ற கணக்கில் இந்திய மகளிர் அணி கைப்பற்றியது.

இந்தத் தொடரில் சிறப்பாக செயல்பட்ட இந்திய வீராங்கனைகள் முன்னேற்றம் கண்டுள்ளனர். அதன்படி துடுப்பாட்டத் தரவரிசையில் இந்திய அணித் தலைவி ஹர்மன்ப்ரீத் கவுர் (654 புள்ளி) 3 இடங்கள் முன்னேறி 9ஆவது இடத்துக்கு வந்துள்ளார். தீப்தி சர்மா (538 புள்ளி) ஒரு இடம் முன்னேறி 19ஆவது இடத்துக்கு வந்துள்ளார்.

ஸ்மிருதி மந்தனா (728 புள்ளி) 4ஆவது இடத்தில் உள்ளார். பந்துவீச்சாளர்கள் தரவரிசையில் தீப்தி சர்மா (703 புள்ளி) 2ஆவது இடத்தில் உள்ளார். ரேணுகா சிங் தாகூர் (424 புள்ளி) 4 இடம் முன்னேறி 32ஆவது இடத்துக்கு வந்துள்ளார். சகலதுறை தரவரிசையில் இந்தியாவின் தீப்தி சர்மா (378 புள்ளி) 4ஆவது இடத்தில் உள்ளார்.

அணிகளுக்கான தரவரிசை பட்டியலில் அவுஸ்திரேலியா (165 புள்ளி) முதல் இடத்திலும், இங்கிலாந்து (126 புள்ளி) 2ஆவது இடத்திலும், இந்தியா (109 புள்ளி) 3ஆவது இடத்திலும் உள்ளன. (எ)



# டெஸ்ட் இறுதிப் போட்டி குறித்து எதுவும் சொல்ல விரும்பவில்லை

மும்பை, நவ. 06

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டி குறித்து நான் எதுவும் சொல்ல விரும்பவில்லை என்று இந்திய அணியின் முன்னாள் வீரர் சுனில் கவாஸ்கர் தெரிவித்தார்.

"இந்திய அணியால் டெஸ்ட் தொடரில் அவுஸ்திரேலிய அணியை அந்த நாட்டின் மண்ணில் 4 - 0 என்ற கணக்கில் வீழ்த்த முடியாது என நான் நினைக்கிறேன். எனது கணிப்பை இந்தியா மாற்றினால் நிச்சயம் எனக்கு அதில் சந்தோஷம் தான். இந்தியா 3 - 1 என்ற கணக்கில் தொடரை வெல்ல வாய்ப்புள்ளது.

அவுஸ்திரேலிய மண்ணில் நடைபெறும் டெஸ்ட் தொடரை வெல்ல வேண்டும் என்பதில் மட்டும் இந்திய அணி கவனம் செலுத்த வேண்டும். 1 - 0, 2 - 0, 3 - 0, 2 - 1, 3 - 1 என எப்படி வென்றாலும் பரவாயில்லை. ஆனால், வெல்ல வேண்டும். அது நிச்சயம் இந்திய கிரிக்கெட் ரசிகர்களுக்கு மகிழ்ச்சி தரும்"- என்றார். (எ)

# ஐ. பி. எல். ஏலம் எப்போது? வெளியான புதிய தகவல்

மும்பை, நவ. 06

ஐ. பி. எல். கிரிக்கெட் போட்டிகளில் விளையாடவுள்ள வீரர்களை வாங்கும் மெகா ஏலம் சவுதி அரேபியா தலைநகர் ரியாத்தில் இந்த மாத இறுதியில் நடைபெறவுள்ளது.

ஐ. பி. எல். 18ஆவது சீசன் அடுத்த வருடம் மார்ச் மாதம் நடைபெறவுள்ளது. இந்த சூழ்நிலையில் ஒவ்வொரு அணியின் தக்கவைக்கும் வீரர்கள் பட்டியலை வெளியிட்டது. இதன்படி சென்னை சூப்பர் கிங்ஸ், கொல்கத்தா நைட் ரைடர்ஸ், மும்பை இந்தியன்ஸ், லக்னோ சூப்பர் ஜெயண்ட்ஸ், சன்ரைசர்ஸ் ஹைதராபாத், குஜராத் டைட்டன்ஸ் ஆகிய அணிகள் 5 வீரர்களை தக்க வைத்துள்ளது. பஞ்சாப் 2, பெங்களூரு 3, டில்லி 4, ராஜஸ்தான் றோயல்ஸ் 6 வீரர்களை தக்க வைத்துள்ளது.

ஆச்சரியம் அளிக்கும் வகையில் ரிஷப் பண்ட் (டில்லி), கே. எல். ராகுல் (லக்னோ), ஸ்ரேயஸ் ஐய்யர் (கொல்கத்தா), அர்ஷ்தீப்சிங் (பஞ்சாப்) போன்ற முன்னணி வீரர்கள் விடுவிக்கப்பட்டனர். இவர்கள் அனைவரும் ஏலத்துக்கு வருகிறார்கள்.

இந்த நிலையில் ஐ. பி. எல். வீரர்கள் மெகா ஏலம் சவுதி அரேபியா தலைநகர் ரியாத்தில் இந்த மாத இறுதியில் நடைபெறவுள்ளது. (எ)

# 2036 ஒலிம்பிக் போட்டிகளை இந்தியாவில் நடத்த முஸ்தீபு

புதுடில்லி, நவ. 06

2036ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளை இந்தியாவில் நடத்த இந்திய ஒலிம்பிக் சங்கம் விருப்பம் வெளியிட்டுள்ளது.

உலக நாடுகள் பங்கேற்கும் ஒலிம்பிக் போட்டி 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் 2036ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியை நடத்த இந்திய ஒலிம்பிக் சங்கம் விருப்பம் தெரிவித்துள்ளது. ஒலிம்பிக் போட்டிகளை நடத்த விருப்பம் தெரிவித்து கடந்த ஒக்ரோபர் முதலாம் திகதி சர்வதேச ஒலிம்பிக் பேரவைக்கு, இந்திய ஒலிம்பிக் சங்கம் கடிதம் எழுதியிருப்பதாக மத்திய விளையாட்டுத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான்...

அமைச்சின் செயலாளர் ரவி செனவிரட்ணவுக்கு அனுப்பிய கடிதத்தில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதிகளில், நான் மாத்திரம் கொலை முயற்சியை எதிர்கொண்டேன் என்ற போதிலும், ஏனைய ஜனாதிபதிகளுக்கு 100 முதல் 240 பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் வழங்கப்பட்டுள்ளனர்.

தமிழீழ விடுதலைப்புலிகளால், நான் எதிர்கொண்ட அச்சுறுத்தல்கள் அதிகம்.

ஜனாதிபதி பதவியில் இருந்து ஓய்வு பெற்ற பின்னரும், விடுதலைப்புலிகளின் அச்சுறுத்தல்களை எதிர்கொள்கின்றேன்.

இந்த நிலையில், முன்னாள் ஜனாதிபதிகளுக்கு பாதுகாப்பை குறைக்கும் அரசாங்கத்தின் முடிவை ஏற்றுக்கொள்ள முடியாது.

என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க குறிப்பிட்டுள்ளார். (அ)

## அரச...

வேலைத்திட்டத்தை வெற்றிய டையச் செய்வதற்கு இதுவரையில் அரச நிர்வாகம் செயல்பட்டு வந்த விதத்தில் மாற்றம் ஏற்பட வேண்டும் - என்று ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் இலங்கை நிர்வாக சேவைகள் சங்கத்தினரை சந்தித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், அரச சேவையில் அரசியல் ரீதியிலான தலையீடுகள் மேற்கொள்ளப்படமாட்டாது. அரச உத்தியோகத்தர்களுக்கு சுதந்திரமாகச் செயல்படுவதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

நாட்டின் பிரதேச அபிவிருத்திக்காக அரச அதிகாரிகளுக்கு விசேட பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. மக்கள் சேவைகளை குறைக்காமல் அரச சேவையில் மேற்கொள்ளப்படும் தேவையற்ற செலவுகளை குறைக்க வேண்டும்.

நாட்டில் மோசடி மற்றும் ஊழலை நிறுத்துவது அரசாங்கத்தின் முக்கிய பணி. மோசடி மற்றும் ஊழல் காரணமாக நாட்டின் திட்டங்களை நடைமுறைப்படுத்தி பூர்த்தி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்றும் கூறினார். (ஐ)

## ஹேமசிறி...

இவர்கள் குற்றங்களை இழைத்தனர் என்று குற்றஞ்சாட்டி சட்டமா அதிபர் தாக்கல் செய்த வழக் கில் கொழும்பு விசேட மூவரடங்கிய மேல்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவே இவ்வாறு வலுவற்றதாக்கப்பட்டுள்ளது.

சட்ட மா அதிபரால் பிரதிவாதிகளுக்கு எதிராக தனித்தனியாக தாக்கல் செய்த இரு வழக்குகளை விசாரித்த ஆதித்ய பட்டபெந்திகே, நாமல் பண்டார பலல்லே, முஹமட் இசர்தீன் ஆகிய நீதிபதிகள் அடங்கிய ஆயம் கடந்த 2022 பெப்ரவரி 18ஆம் திகதி பிரதிவாதிகளை விடுவித்தது. இந்தத் தீர்ப்பை சவாலுக்கு உட்படுத்தி சட்டமாஅதிபரால் தாக்கல் செய்யப்பட்ட மனு நேற்று செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

நீதியரசர் பிரீத்தி பத்மன் சூரசேன தலைமையிலான மூவர் கொண்ட நீதியரசர்களின் ஆயம் முன்னிலையில் நடந்த இந்த வழக்கில், விசாரணையை மீள ஆரம்பித்து பிரதிவாதிகள் தரப்பு விளக்கத்தை கோருமாறு மேல்நீதிமன்றத்துக்கு நீதியரசர்கள் ஆயம் உத்தரவிட்டது.

மேலும், வழக்கு விசாரணைகளின் போது மேல் நீதிமன்றம் பிரதிவாதிகள் தரப்பிடம் விளக்கம் கோரியிருக்க வேண்டும் - என்றும் அந்த நீதியரசர்களின் ஆயம் கூறியதுடன், அவ்வாறு செய்யாமல் பிரதிவாதிகளை விடுவிப்பது சட்டத்துக்கு முரணான உத்தரவு - எனவும் குறிப்பிட்டதுடன், அவர் களை மீளவும் விசாரிக்குமாறும் தீர்ப்பளித்துள்ளது. (ஐ)

## கட்சிக்குள்...

வடமராட்சி ஊடக இல்லத்தில் அவர் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், தேர்தல் பிரசார மேடைகளில், முடிந்தால் எனது பெயரை தவிர்த்து உங்களின் தேர்தல் பரப்புரைகளை செய்யுங்கள் பார்க்கலாம் என்று ஏனைய கட்சிகளுக்கு சவாலும் விடுத்தார்.

மேலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உடைத்து முதலில் வெளியேறியவர்கள் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர்தான். மக்களை கொன்றொழித்த சரத் பொன்சேகாவுக்கு ஆதரவளித்து தீர்மானம் எடுத்தபோது மேடையில் ஒன்றாக இருந்தவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம். அதன் பின்னர் நடந்த பொதுத் தேர்தலில் ஆசனப் பங்கீட்டின்போதே கட்சியை விட்டு வெளியேறினார். ஆசனப் பங்கீட்டு பிரச்னையே மற்றைய கட்சிகளும் வெளியேறக் காரணமாயின.

பொதுத் தேர்தலை அடுத்து தேசிய அரசு அமைந்தால் அரசுக்கு ஆதரவளிப்போம். ஆனால், எதிர்க்கட்சி வரிசையிலேயே அமர்வோம். நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தைப் போன்று.", என்றும் சுமந்திரன் சொன்னார். (ஐ)

## தமிழ் அரசு...

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். செய்தியாளர்களின் கேள்விக்கு பதிலளித்த அவர் மேலும் கூறுகையில்,

"ஜனாதிபதித் தேர்தலின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (தமிழ் அரசுக் கட்சி) சஜித் பிரேமதாஸவுக்கே ஆதரவளித்தது. எமக்கு ஆதரவளிக்கவில்லை. இம்முறை அந்தக் கட்சியினர் தேர்தலில் போட்டியிடுகின்றனர். தேர்தல் தொடர்பில் எம்மிடையே இணக்கப்பாடு எதுவும் இல்லை. அது சம்பந்தமாக பேச்சு நடத்தப்படவும் இல்லை.

பாராளுமன்றத் தேர்தலில் சாதாரண பெரும்பான்மையை விடவும் அதிகமான ஆசனங்கள் தேசிய மக்கள் சக்திக்கு கிடைக்கப்பெறும். எனவே, ஆட்சியமைப்பதற்கான உதவியை அவர்களிடம் (தமிழ் அரசுக் கட்சி) ஆதரவு கோருவதற்கான சாத்தியம் எழாது. எமக்கு பாராளுமன்றத்தில் பெரும் பலம் தேவையில்லை, அரசாங்கத்தை பலமாக முன்னெடுப்பதற்குரிய பெரும்பான்மை பலம் இருந்தால் போதும்." - என்றார். (அ-ஐ)

## டியாகோ...

இந்தத் தீவிலிருந்து இலங்கை தமிழ் குடியேற்றவாசிகளை பிரிட்டனுக்குள் அனுமதிக்க பிரிட்டன் அரசாங்கம் முன்னர் எதிர்ப்புத் தெரிவித்திருந்தது. இந்த நிலையில் கொள்கை மாற்றமொன்றை செய்வதற்கு பிரிட்டன் அரசாங்கம் இணங்கியுள்ளது என்று அரசாங்கத்தின் சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர்.

இதனடிப்படையில், புகலிட கோரிக்கையாளர்கள் அனைவரையும் நேரடியாக பிரிட்டனுக்கு மாற்றுவதற்கு அனுமதி வழங்கப்படும் இதேவேளை, குற்றச்சாட்டுகள் அல்லது விசாரணைகளை எதிர்கொள்ளாத ஆண்களுக்கும் அனுமதி வழங்கப்படும் என சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர்.

டியாகோ கார்சியாவில் உள்ள ஈழத் தமிழர்களை தொடர்புகொண்டு பேசியுள்ள பிரிட்டன் அதிகாரியொருவர் தீவில் காணப்படும் வழமைக்கு மாறான சூழ்நிலை காரணமாக அவர்களை இங்கிலாந்துக்கு அழைத்து வருவதற்கான முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

டியாகோ கார்சியாவை சென்றடைந்த புலம்பெயர்ந்தோர் விடயத்தில் முன்னைய அரசாங்கத்தால் தீர்க்கப்படாத ஆழமான சிக்கலான சூழ்நிலையை தற்போதைய அரசாங்கம் சுவீகரிக்க நேர்ந்தது என்று பிரிட்டனின் பிரதமர் அலுவலகத்தின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

# தமிழ் அரசின் துரோகத்தாலேயே அதன் கூடாரம் காலியாகியுள்ளது

### சிவாஜிலிங்கம் சொல்கிறார்

வடமராட்சி, நவ. 06

தமிழ் அரசுக் கட்சியின் பச்சை சந்தர்ப்பவாத துரோகத்தனத்தால் இன்று அந்த கட்சியின் கூடாரமே காலியாகியுள்ளது - என்று ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் எம். கே. சிவாஜிலிங்கம் கூறியுள்ளார்.

நேற்று வடமராட்சி கிழக்கில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தமிழீழ விடுதலை போராட்ட வரலாற்றில் இப்போது இருக்கக்கூடிய இயக்கங்களில் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தைத் தொடர்ந்து 2000ஆம் ஆண்டுக்கு பின்னர் ஜனநாயக அரசியலுக்கு வந்த இயக்கங்களிடம் ஆயுதங்கள் இருக்கவில்லை.

இன்று 25 வருடங்கள் கடந்துள்ள சூழ்நிலையிலும் நடந்த தவறுகளை பற்றி விசாரிப்பதாக இருந்தால் அவர்கள் விசாரிக்கட்டும். அதில் பிரச்னை இல்லை. ஆனால், அவ்வாறு இருந்த தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ), ஈ. பி. ஆர். எல். எவ். உள்ளிட்ட கட்சிகளுடன் 2001ஆம் ஆண்டிலேயே தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஆரம்பிக்கப்பட்டது. இன்று 24 ஆண்டுகள் பூர்த்தியாகியுள்ள நிலையில், அவற்றோடு சேர்ந்து இருந்தவர்கள் தமிழர் விடுதலை கூட்டணியாக இருந்த தமிழ் அரசு கட்சி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் ஆகியவை. முன்னர் நடந்த விடயங்கள் பற்றி கூறுவது பொருத்தப்பாடுடையவையா என்பதை அவர்கள் தங்களின் மனச்சாட்சியை கேட்டுக்கொள்ளட்டும்.

விசாரணை கோரிய தமிழ் அரசு கட்சி வேட்பாளர் பிரகாஷ் பிரதேச சபை தலைவராக இருந்தவர். அப்போது விபசார நடவடிக்கையில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டுகள்கூட இருக்கின்றன. அதைப்பற்றியும் நாங்கள் விசாரிக்க வேண்டும் என்று கோர முடியும்.

இன்று இயக்கங்கள் முன்புபோல் இருந்திருந்தால் எங்களுடைய மண்ணில் விபசாரமும் இருந்திருக்காது போதைப் பொருள் பிரச்னையும் இருந்திருக்காது. அவ்வாறான எதுவும் இல்லாத நல்ல தொரு நிலைமை இருந்திருக்கும் என்பதனை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். தம்பி பிரகாஷும் புரிந்துகொள்ள வேண்டும்.

சீ. வீ. கே. சிவஞானம் ஐயா 90 வீதமான தமிழ் அரசுக் கட்சிக்காரர்கள் புலிகள் இயக்கத்துக்குப் போனார்கள் என்று கூறியுள்ளார். ஜனநாயக வழியிலே இருந்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் நடவடிக்கைகளால் வெறுப்படைந்துதான் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் உள்ளிட்ட இயக்கங்கள் ஒவ்வொன்றும் ஆயுதப் போராட்டத்தை தீவிரப்படுத்தியிருந்தனர். ஆகவே, தமிழ் அரசுக் கட்சியில் இருந்த பெரும்பாலானவர்கள்தான் விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்து போராடினார்கள் என்று உரிமை கோருவதில் அர்த்தமில்லை.

சீ. வீ. கே. சிவஞானம் ஐயா, எப்போது தமிழ் அரசு கட்சிக்கு வந்தார். 2001, 2004 தேர்தல்களில் அவர் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் சார்பிலேயே போட்டியிட்டார். அவ்வாறு இருக்கும் போது தேர்தல் ஆதாயத்துக்காகவே உண்மைக்கு புறம்பான கதைகளை கூறியுள்ளார் - என்றார். (ஐ-02)

## யாழ்...

காரைதீவில் நேற்றுமுன்தினம் இரவு நடந்த பரப்புரைக் கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சி கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்திலும் போட்டியிடுகின்றது. அம்பாறை மாவட்ட தமிழர்களின் பிரதிநிதித்துவம் பறிபோய்விடக்கூடாது என்பதனால் கடந்த காலங்களில் இங்கு போட்டியிடுவதிலிருந்து நாம் விலகியிருந்தோம். கடந்த தேர்தலில் யாழ்ப்பாண தலைமைகள் இங்கே நிராகரிக்கப்பட்டுள்ளனர். அதேவேளை மாற்றுத் தலைமையின் அவசியத்தை எமது மக்கள் நன்கு உணர்த்தியுள்ளனர். இதன் காரணமாகவே அம்பாறை மக்களுக்குரிய தலைமைத்துவத்தை வழங்க தமிழ் மக்கள் விடுதலை புலிகளாகிய நாம் முன்வந்துள்ளோம்.

கடந்த தேர்தலில் தோல்வி கண்ட அந்த போலி தமிழ் தேசியவாதிகள் அம்பாறை மக்களின் ஆணைக்கு மதிப்பளிப்பவர்களாக இருந்திருந்தால் அவர்கள் இந்தத் தேர்தலில் அம்பாறையில் போட்டியிடுவதைத் தவிர்த்திருக்க வேண்டும். ஆனால், ஒன்றுக்கு இரண்டாக வந்து இங்கே வீடென்றும் சங்கென்றும் பிரித்து நின்று அம்பாறை மக்களின் வாக்குகளை சிதறடிக்கத் துணிந்துள்ளனர். நிச்சயம் அவர்கள் வெல்லப்போவதில்லை. கடந்த தேர்தல்களில் ஒன்றாக நின்றபோதே அவர்கள் தோல்வி அடைந்தார்கள்.

ஆனால், தற்போது எப்படியாவது ஆயிரம் இரண்டாயிரம் என்று சேகரிக்கும் வாக்குகள் மூலம் தங்களுக்கு ஒரு தேசிய பட்டியலை பெற்றுக்கொள்வதே அவர்களின் தந்திரமான நோக்கமாகும். யாழ். தலைமைகளின் அந்த நரித்தந்திரத்தை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். அவர்களின் எடுபிடிகளுக்கு தகுந்த பாடம் கற்பிக்க நீங்கள் உறுதி எடுங்கள் - இவ்வாறு கூறினார்.

# வீழ்ச்சி அடைந்தது ரூபாவின் பெறுமதி!

கொழும்பு, நவ. 06

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதியானது நேற்று முன்தினத்துடன் ஒப்பிடுகையில் நேற்று குறைந்துள்ளது.

அதன்படி, அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு மற்றும் விற்பனை பெறுமதியானது நேற்று முறையே 288.67 ரூபாவாகவும், 297.72 ரூபாவாகவும் வீழ்ச்சி கண்டுள்ளது.

நேற்று முன் தினம் அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு மற்றும் விற்பனை பெறுமதியானது முறையே 288.55 ரூபாவாகவும், 297.60 ரூபாவாகவும் காணப்பட்டது.

அதேநேரம், ஏனைய பிரதான வெளிநாட்டு நாணயங்களுக்கு நிகராக ரூபாவின் பெறுமதி அதிகரித்துள்ளது. (அ)

## அநுர...

மேலும்,

"நாட்டை டிஜிற்றல் மயமாக்குவதற்கு ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவுக்கு தேவையான ஆதரவை நாங்கள் வழங்குவோம்.

தற்போதைய அரசாங்கம் அரசமைப்பு திருத்தம் மற்றும் தேர்தல் சிறப்புரிமைகளை குறைப்பது தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளது. உறுப்பினர்களின் சிறப்புரிமைகளை குறைப்பதில் எந்த சிக்கலும் இல்லை. நாட்டின் எதிர்காலத்துக்கு இது போதாது.

நாட்டு மக்களின் எதிர்காலம் வளமானதாக அமைய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அரசாங்கம் முன்னெடுக்கும் சரியான வேலைத் திட்டத்துக்கு தேவையான ஆதரவு வழங்கப்படும்.


ஜனாதிபதி தேர்தலைவிடவும் மொட்டு கட்சிக்குரிய வாக்கு வங்கி தற்போது அதிகரித்துள்ளது. சிறீ லங்கா பொதுஜன பெரமுன கட்சி நிச்சயம் மீண்டெழும். அடுத்த ஐந்தாண்டுகளுக்கு பிறகு ஆட்சியை பிடிப்பதே எமது இலக்கு - என்றும் அவர் கூறினார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# வடக்கு தமிழர்கள் மத்தியில் எம்மைப் பற்றி கட்டுக்கதை!

## நம்பவேண்டாம் என்கிறார் ரில்வின் சில்வா



கொழும்பு, நவ. 06

**அனைத்து இன மக்களினதும் இன, மத, மொழி மற்றும் கலாசார உரிமைகளை நாம் ஏற்கின்றோம். நல்லிணக்கமே எமது பிரதான இலக்கு. அப்படி இருந்தும் வடக்கு தமிழ் மக்கள் மத்தியில் எம்மை பற்றி கட்டுக்கதைகள் பரப்படுகின்றன. இதனை மக்கள் நம்பக்கூடாது என்று ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.**

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே இவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் மேலும் கூறியவை வருமாறு-

தேசிய மக்கள் சக்திக்கு எதிராக சூழ்ச்சி முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. குறிப்பாக தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் மத்தியில் தேசிய மக்கள் சக்தி தொடர்பில் தவறான விம்பம் தோற்றுவிக்கப்படுகின்றது. கடந்த கால திரிவுபடுத்தப்பட்ட கதைகள் சமூகவலைத்தளங்களில் பரப்பட்டுவருகின்றன.

அரசியல் ரீதியில் வங்குரோத்து அடைந்துள்ள சில கட்சிகளுக்கு கொள்கை ரீதியில் எம்முடன் மோத முடியாது. இதனால்தான் கட்டுக்கதைகள் பரப்பட்டு வருகின்றன. எனவே, வதந்திகளை மக்கள் நம்பக் கூடாது. இன மற்றும் மத ரீதியில் நாம் அநீதிகளை இழக்கமாட்டோம். அனைத்து இன மக்களினதும் இன, மத, மொழி, கலாசார உரிமைகளை ஏற்று மதிக்கின்றோம். இன, மத, மொழி பேதமற்ற இலங்கையை கட்டியெழுப்புவதே எமது இலக்காகும்.

வங்குரோத்தடைந்துள்ள எதிரணிகள் கட்டுக்கதைகளை பரப்பியே தற்போது அரசியல் நடத்த முற்படுகின்றன. குறிப்பாக வடக்கில் தமிழ் மக்கள் மத்தியிலும், நாம் சொல்லாத விடயங்களை பரப்பி, தவறான விம்பத்தை தோற்றுவிப்பதற்கு முற்படுகின்றனர். இவ்வாறான கதைகளை மக்கள் நம்பக்கூடாது. இப்படியான கதைகளை பரப்புபவர்களை மக்கள் தோற்கடிக்க வேண்டும் - என்றார். (அ)

# ஸ்ரீஜயவர்தனபுர பல்கலை மாணவர்கள் போராட்டம்!



கொழும்பு, நவ. 06

ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நேற்று கொழும்பில் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

பின்னர் விகாரமகாதேவி பூங்காவுக்கு முன்பாக இருந்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவை நோக்கி எதிர்ப்பு பேரணியாக சென்றனர்.

துணைவேந்தர், கணக்காய்வாளர், முகாமைத்துவ பீடங்களின் கோரிக்கைக்கு அமைய மாணவர் சங்கங்களை ஒடுக்கும் சதித் திட்டத்தை உடனடியாக வாபஸ் பெறுமாறு கோரி இந்த போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது.

அத்துடன் முகாமைத்துவ பீட மாணவர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள நியாயமற்ற வகுப்புத் தடையை நீக்க வேண்டும் எனவும் போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் தெரிவித்தனர்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அரு கில் சென்ற மாணவர்கள் அங்கு ஆர்ப்பாட்டத்தில் ஈடு பட்டதையடுத்து 6 மாணவர்கள் அதிகாரிகளுடன் கலந்துரையாடலில் ஈடுபடுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஐஸ்லாந்து சுற்றுலாவிகள் 24 பேர் இலங்கை வருகை!

கொழும்பு, நவ. 06

முதல் முறையாக ஐஸ்லாந்தில் இருந்து சுற்றுலாப் பயணிகள் குழு, இலங்கைக்கு வருகை தந்துள்ளது.

இந்த சுற்றுலாப் பயணிகள் குழுவினர் நேற்று காலை 8.33 மணியளவில், டுபாய் எமிரேட்ஸ் விமானம் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

24 பேரை கொண்ட இந்த சுற்றுலாப் பயணிகள் குழு 14 நாட்கள், இலங்கையில் தங்கியிருக்கவுள்ளது.

இந்த ஐஸ்லாந்து சுற்றுலாப் பயணிகள், கொழும்பு, ஹபரணை, கண்டி, சிகிரியா, பெந்தோட்டை மற்றும் எல்ல ஆகிய பிரதேசங்களில் உள்ள சுற்றுலாத் தலங்களுக்கு விஜயம் செய்யவுள்ளனர். (அ)

# தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர்கள் அழைப்பு

கொழும்பு, நவ. 06

அனைத்து மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர்கள் மற்றும் உதவித் தேர்தல்கள் ஆணையாளர்கள் கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

நடைபெறவுள்ள பொதுத்தேர்தல் நடவடிக்கைகள் தொடர்பான கலந்துரையாடலுக்காக இன்று கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

அதற்கிணங்க இராஜகிரியவிலுள்ள தேர்தல்கள் செயலகத்தில் இன்று நடைபெறவுள்ள கலந்துரையாடலில் அனைவரும் பங்கேற்றுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# வான் பாயும் நீர்த்தேக்கங்கள்

கொழும்பு, நவ. 06

நாட்டில், பலத்த மழையுடன் கூடிய காலநிலை காரணமாக, ஒன்பது நீர்த்தேக்கங்கள் வான்பாய ஆரம்பித்துள்ளதாக, நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது.

பதலகொடை, தெதுரு ஓயா, எல்லேவெல, கேகனதுர, இராஜாங்கனை, தப்போவ, வான் எல, வீரவில மற்றும் யோதவெவ ஆகிய நீர்த்தேக்கங்கள், வான்பாய்ந்து வருகின்றன.

மேல், தென், மத்திய, சப்ரகமுவ, ஊவா, வடமேல் மாகாணங்கள் மற்றும் 15 மாவட்டங்களுக்கு, இடி, மின்னல் அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மத்திய, சப்ரகமுவ, ஊவா மற்றும் தென் மாகாணங்களில், மாலை அல்லது இரவு வேளைகளில், இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடும் என, வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சில பகுதிகளில், 50 மில்லி மீற்றருக்கும் அதிகமான கன மழை பெய்யக் கூடும் என்பதுடன், வடக்கு மற்றும் வடமேல் மாகாணங்களில் பல தடவைகள் லேசான மழை பெய்யக் கூடும்.

மேல், சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களின் சில பகுதிகளிலும், காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும், காலை வேளையில், பனிமூட்டமான நிலை காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.












இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 06.11.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org